KALANILAYAM

கலா நிலயம்.

V 7. No. 34. 2 [illegible] 8. 1934.

ஐ
m211,N28KN
N34.7.34
199184

KALANILAYAM

னிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஹு ஆகஸ்ட் மீ 30உ [No. 34

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 529
2. தமிழ்ப் பாடம்—
நைடதம்—நளன்தூதுப் படலம். 531
3. சூளாமணி (குமாரகாலச் சருக்கம்)
வித்துவான் T. P. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை M. A. B. L. 534
4. இரவீந்திரநாதர் கட்டுரைகள் (தபோவனம்)
W. E. அரியநாயகம் B.A., B.D., B. Ed, & ஆஷாதேவி M. A. 536
5. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L 537
6. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 9-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 540
7. காலம்—(யாண்டு).
வித்வான் K. S. விசுவநாதசாஸ்திரி P.O.L. 541
8. வேண்டவே வேண்டா (சிறு கதை)
K. S. முத்துராமலிங்கம் M. A. 543
9. வர்த்தமானம் 544

கலாநிலயம்

எத்தைக்கண்டு இச்சை கொள்வோம் 3.

வாழ்க்கைக்குரிய சாதனங்கள் என்று கூறி, ஓடவுந் தூரத்தவும், கட்டவும் இடிக்கவும், கொல்லவும் வெல்லவும், பூதசாத்திரதின் உதவியால் பற்பலகருவிகள் காட்டுகின்ற இக்களிப்பினிற்கு மனிதர், தம் இதயத்துள் நிறைந்து பிரபிஞ்சத்துடன் பிணைத்து வைத்திருந்த வொரு செல்வத்தைத் துறந்துவறியவராகிவிட்டனர். இந்தவறுமையோமிகப் பொல்லாதது. ஏனெனில், வயிற்றின் வறுமையானது, ஒருவேளை உணவு கிடைத்தால் அவ்வேளை யளவேனும் ஆறியிருப்பது போல்ஆறாமல், இதயமோ, இழந்ததத்தனையும் மீண்டும் பெற்றால்தான் அமைதியடையும். பசித்திருப்பவனொருகால் உணவு கிடைக்குமாயின் அதனை உண்டு சமிக்கக் கூடியபடி தன் வயிற்றை வைத்துக்கொண்டு இருக்கிறானேயன்றி இடையிலே கல்லைத்தின்று அதனைக் கெடுத்துக்கொள்வதில்லை. உணவு இது உணவு அல்லாதது இது என்பது அவனுக்கு யாதும் ஐயமறத் தெரியும். முன்னுரைத்தபடி இதயம் வறியனாய்க் கிடக்கின்றவொருவனோ, அப்பூசாத்திரங்கள் 'கண்டுபிடித்தோம்' என்று ஏமாப்புடன் கூறுகின்ற 'உண்மைகளால்' தன் இதயத்தை நிரப்பப்புகுந்து அதனால் பின்னும் பாழே யாகின்றான். இவ்வகை உண்மைகளைத் தேடித்தேடி யலைந்து கண்டுபிடித்தன் பயனாக அவன் நினைவு தன்னைத் தன்வீட்டு நாயினோடு ஒப்புநோக்கி வேற்றுமை காணமாட்டால் முடிகின்ற சரித்திரத்தை வில் ரோன்ட் சுடச்சுடக் காட்டியிருப்பது கருதத்தக்கது—

“உயிர்வாழ்க்கையின் ஓர் உதாரணமாக இதோ என் [illegible] இருக்கின்றது. அதன் தாயின் நாற்றத்திற்கு ஆசைப்பட்ட ஓர் ஆண்நாயின் பிடிவாதத்தால் பிறந்தது. பிறந்து, போட்டதையெல்லாந் தின்றும், எறிந்ததையெல்லாந் துரத்தியும், வீட்டின் அடக்கமான இடம் தேடிப் படுத்தும் வளர்கின்றது. தட்டிக்கொடுக்கின்ற கையை நக்கும், அடிபடும்போது அழும். தெருவிற் சென்று மற்ற நாய்களோடு விளையாடும்; அயல்தெரு நாய்வந்தால், கடிக்கும், தானுங் கடிபட்டு, அலறிக்கொண்டு வீட்டினுள் ஓடிவரும். பிறகு காம இச்சைக்கு ஆளாகி, ஐம்பது நாய்களை என்வீட்டு வாயிலுக்குக் கொணர்ந்து சேர்த்துவிடுகின்றது. இரவு முழுவதும், பக்கத்து வீட்டு 'லயன்' என் வீட்டுக்கதவில்முட்டிக்கொண்டு அழுகின்ற அவலம்பெரிது.

பிறகு, இந்த 'லில்லி' அம்மை, அல்லலும் வருத்தமும் அதிகம்பட்டு, தன்வயிற்றிலிருந்து வந்து வந்து விழுகின்ற இது இன்னதென்று அறிந்துகொள்ளமாட்டாத ஆச்சரியத்தினிடையே, என் வீடுமுழுதும் குட்டிகளை உதிர்த்துவிடுகின்றது. பொறுமையோடு அக்குட்டிகளுக்குப் பால்கொடுக்கின்றது; கடுமையாக அவைகளைக் காப்பாற்றுகின்றது. தம் தாயின் உயிரையே உறிஞ்சுவதுபோல் அத்தனை குட்டிகளும் ஒன்றாய்ச்சேர்ந்து ஊட்டும்போது இது ஒருபாத்திரத்தில் பாலை நக்கிக்கொண்டிருக்கும். “நான் குடிக்கின்றபாலெல்லாம் இடையே என்வயிற்றில் சிறிது தங்குகின்றதானாலும் இறுதியில் இக்குட்டிகளின் வயிற்றிற்குள் போவதற்கேயோ குடிக்கின்றேன்” என்று எண்ணக்கூடுமாயின் என்னுடைய லில்லியுங்கூட ஒரு பூதசாஸ்திரியும் தத்துவசாஸ்திரியும் ஆகிவிடக்கூடும்.

ஒவ்வொன்றாக எடுத்து இக்குட்டிகளை எனது நண்பர்களுக்குக் கொடுத்துவிடுகின்றேன். இந்த 'லில்லி' இரண்டொருநாள் அவைகளை அங்குமிங்குந்தேடிவிட்டுஅப்புறம் அறவே மறந்துவிடுகின்றது. கடைசியில் ஒருகுட்டி அதன் காலைக் கடித்தும் அதற்கு வைத்த உணவைத் தான் தின்

றும் பாடுபடுத்திப் பிறகு அதுவும் மற்றையகுட்டிகள் போனவழி போய்விடுகின்றது. இதற்கும் தாய்நாய் மனமுடைந்து அழுவதில்லை.பண்டேபோல் என் வில்லி ஒருகன்னியாகி, மீண்டும் காமநோய்பற்றித் தானும் கலங்கித் தெருநாய்களையும் கலக்கும்வரையில் சுகமாகவே வாழ்கின்றது. அப்புறம்,—மோப்பம்பிடித்தல் குட்டிபோடுதல்—வாழ்க்கைச் சக்கரம் மறுபடியும் சுழலத்தலைப்படுகின்றது.”

இக்கால மனிதவாழ்க்கையின் சாரம் இந்நாயின் சரிதமேயன்றி வேறொன்று உண்டோஎன்று வில்டூரோண்ட் கேட்கின்றார். பிறப்பும் இறப்புமாகச் சுழல்கின்ற இந்நாய் வில்லியின் நிலைமையைவிட நம் வாழ்க்கைக்கு என்ன குறிப்புளது என்று வியக்கும்படி நேர்ந்துவிட்டதே என்று வருந்துகின்றார் அவர். “பிறத்தல்-புணர்தல்-இறத்தல்” இதுதான் மானுடசரிதம், மற்றவெல்லாம் வீண் அலங்காரம். இந்த நாய்முறைக் காட்சியாகக் காணுமிடத்து அகப்பொருளனைத்தும், களவும் கற்பும், பிரகிருதியானது தன் காரியத்தைப் பிடிவாதமாக நடத்திக்கொள்ளும் காரியங்களின் கோவையாகவே தோன்றுகின்றது. இன்று மனிதவாழ்க்கையில் விரவியிருக்கின்ற, இந்த அவயவ அலங்காரங்களும், இந்தத் தெரியும்படி மறைக்கின்ற சூழ்ச்சிகளும், இந்த அத்தரும் புனுகும், இந்த அசைவும் அபிநயங்களும், இந்த உற்று உற்று நோக்கலும் எட்டியெட்டிப் பார்த்தலும், இந்த நாவல்களும் நாடகங்களும் ஸினிமாக்களும், இந்தப் பணஞ்சேர்த்தலும், இந்த ஆடைதைத்தலும் வெளுத்தலும், இந்தக்கூத்தும் பாட்டும், இந்தக் கூந்தலை விரித்தலும் கட்டலும், இந்தப் பிதற்றலும், இந்தப் பெருஞ்சிரிப்பும் சிறுநகையும், இந்த அரிப்பும்—இவையெல்லாம் பிள்ளைபெறுவதென்னுமொரு சடங்கின் பூர்வாங்கங்களேதான் அல்லவா, என்று எடுத்துக் கேட்கின்றார் அவர். இவைகளின்முடிவும் முதலைப்போலவே இருக்கின்றது—இவைகளுக்கிடையே பிறக்கின்றது ஒருகுழந்தை.

இவைகளுக்கிடையே ஒரு குழந்தை பிறக்கின்றது. முன்னாளிலும் அப்படியே;ஆயினும்,அக்காலத்தில் பிறந்த அக்குழந்தைக்கு ஆன்மா என்பதொன்று இருந்தது;மற்று இன்றைக்கோ இப்பூதசாத்திரங்கள் கற்பனை செய்துதந்த உண்மையால் வளர்ந்த அறிவினால் அவ்வான்மா இல்லாமற்போய்விட்டதே—என்பதை எண்ணுமளவிற்றான் ஆற்றமாட்டா ஏக்கம் சூழ்ந்துகொள்கின்றது. முன்னே ஒரு குழந்தை பிறந்தவுடன் தானங்கள் செய்வார்,முதியோர் ஆசிகள் பெறுவார், இப்பொழுதோ எத்தனை நிறையிருக்கின்றதென்றறிவதற்குக் குழந்தையைத் துலாக்கோலில் தூக்கிவிடுகின்றனர். இறைவனை வணங்குதற்குத் தலையும், வழுத்துதற்கு வாயும், திருப்பதிகளை வலஞ்செய்யக் கால்களும், வறியோர்க்கு வழங்குதற்குக் கைகளும் உடையவொரு ஜீவனாக அக்குழந்தையை மதித்தது போகி, இப்பொழுது வியாதிக்கெல்லாம் வைப்பாகிய ஒரு தசைநார்ப் பிண்டமாகவே அது கருதப்படுகின்றது. பிறகு அது,பசியும்காமமும் பிடித்தலைக்கப் பேயாட்டமாடும் ஒரு உருவமாய் நடமாடுகின்றது. ஒருகால் இது மனிதனென்று பேரெடுக்கும்போது தன் பண்டைய பெருமையை நினைக்க நேரலாம். உடனே,பூதசாஸ்த்திரிகளும் அவர்களை அனுசரித்து வாதிக்கின்ற தத்துவசாஸ்த்திரிகளும்,அவ்வெண்ணங்களெல்லாம் “பொய்,பொய், வீண் பிரமை” என்னவே போதித்துவிடுவார்கள். இந்த மனிதன், ஒருகால், தன் ஆன்மாவின் மேன்மையை மறந்ததற்கும் மறுப்பதற்கும் ஈடுசெய்வான்போல், இமயமலையின் உயரத்தைக் கண்டுபிடித்துவிடலாம். தனது ஆன்மாவுடன் அந்தரங்கமாகப் பேசிப்பேசி ஆனந்தங்கொண்டிருக்க வகையற்றுப்போனதால், பல்லாயிரம் மைல்களுக்கப்பாலிருக்கும் தன்போன்ற மாமிசப் பிண்டங்களோடு நினைத்த நிமிடத்தில் பேசவல்ல கருவிகளைக் கண்டுபிடித்துவிடலாம். தன் மனையிலுள்ளவர்கள் எவ்வாறு இருக்கின்றனர் என்பதை இன்பமுடன்கருதி மகிழ்வதற்கு இயன்ற அன்புதான் அற்றவனாகிவிட்டபடியால், செவ்வாய் புதன் அனைய கிரகங்களில் ஜனங்கள் வசிக்கின்றார்களோ என்பதைக் கண்டுபிடித்துக் கூறிவிடலாம். ஆண்களும் பெண்களும் தம் ஆண்மையைப் பெண்மையை ஆளவேண்டும் என்னும் அவசியமும் அறிவும் அற்றவர்களானதால், அங்கங்கே சர்வாதிகாரிகள் ஆகிவிடலாம். என்றாலும் என்! ஆன்மானுபவம் அவனுக்கில்லையாதலின், நிமிடத்திற்குநிமிடம் இவன் அழுகியழுகி முடிவதல்லாமல் வேறொன்றும் இல்லையே. மற்றப் பிராணிகள் நம்மைக் காணுமாறு நாமே நம்மைக் கண்டுகொள்ளக் கூடுமானால், எவ்வாறுதோன்றுவோம்? வீணுக்கு ஏதேதோ எப்பொழுதும் பிதற்றிக்கொண்டிருக்கின்ற அசடுகளென்ன நாய்களோ நம்மை மதிக்கும். கொதுகின் கண்களுக்கு நாம் அத்தனையும் அதன் ஆகாரக்குவியல்கள். இப்படியே நாம் எல்லாவகையிலும், ‘அரிது அரிது மானுடராதலரிது’ என்ற கருத்தையெல்லாம் அவலமாக்கிவிட்டு, பாழாகும் அழிவிற்கு இரையாகப் பிறந்தவர்களாகவே - இப்பொழுது முழங்கும் சாத்திரங்களின் ஆராய்ச்சியால் - முடிந்துவிட்டோம்.

சாத்திர ஆராய்ச்சிகள் நம்மைக்கொணர்ந்துசேர்த்திருக்கின்றகதிதானிதுவென்னின்,சரித்திரஆராய்ச்சிகள் நமக்குச் செய்துவரும் உதவியும்அன்னதே. மனிதனது முன்னேற்றத்தை வரன்முறைப்படுத்திக் காட்டுவதேசரித்திரம் என்பர்.இதுவோபொய்யென்பதும் அவர்களுக்குத் தெரிந்திருத்தல் வேண்டுமே. ஆயிரம் ஆயிரம் ஜாதியார், எழுந்து எழுந்து முன்னேற்றம் அடைந்து என்ன செய்தனர் - கிரீஸ் ரோம் ஈஜிப்ட் பிஸான்டியம் பெரு பர்ஷியா பேபிலோன் - எல்லாரும் அழிந்தனர். பூதசாத்திர உண்மைகள் மனிதனுடைய தனிவாழ்க்கை வீண் என்றுகாட்டுவதுபோலவே, சரித்திர சாஸ்த்திர வுண்மைகள், பொதுவாழ்க்கையும் அவ்வாறே என்று அந்த ஒப்பாரியில் கலந்து அழும்படி செய்கின்றன.

நாம் முன்னேற்றங்களென்று அழைப்பனவெல்லாம், மேற்புறத்தே தோன்றுகின்ற சிறு சிறு மாறுதல்களேயாம். உடை ஒட்டம் ஆட்சிசமயம், இவைகளில் பழைய காரியங்களையே புதிய முறையில் செய்ய முயன்று புதியபுதிய பிழைகள் புறப்பட அவைகளை முன்னேற்றமென்று முழுங்கும்படி சில அறிவிலிகள் மனிதரைப் பழக்கிவைக்கின்றனர். இவைகளுக்கெல்லாம் அடியில் இருக்கின்ற எண்ணம் ஒன்றே. விசையாய எந்திரங்களும் மின்சாரக்கருவிகளும், பீரங்கிகளும் பாம்களும் ஆகாயக்கப்பல்களும் இன்றைக்கு உபயோகப்படுத்துகின்ற மனிதன்,முன் மரக்கலப்பையும் வில்லும் அம்பும் உபயோகப்படுத்தின மனிதனின் வேறானவனல்லன். கருவிகள் வேறேயன்றிக் கருமமோ ஒன்றே. அளவுதான் [illegible]

m211,N28K.N
119184

மோவெனின்,முன்னைப்போன்றே இன்றைக்கும் அத்துணைகொடியது, அத்துணைசுயநயமானது,அத்துணை முழுமூடமாய் ஒன்றோடொன்றொவ்வாதது. அது போன்றே பிறரைக் கொல்வது, தன்னையுந் தற்கொலைபுரிந்துகொள்வது. உற்றுப்பார்க்குமிடத்து ஒன்று நிச்சயம்—மனிதரைத்தவிர மற்றவைகளெல்லாம் முன்னேற்றமடைந்துவிட்டன.

இவ்வகை ஆன்மஉணர்விலும் நிரந்தரவாழ்விலும் தமதுமுன்னையோர் வைத்திருந்த உயரிய நம்பிக்கைக்குப்பதிலாய், சென்றநூற்றாண்டில், இயந்திரங்களின் முன்னேற்றத்தையும் பொதுஜனக் கல்வியையும் ஜனநாயகமுறைகளையும் தங்களை உய்விக்கவல்ல கருத்துக்களாக மேனாட்டோரும், அவர்களை நெடிது கும்பிட்டு வாழ்வதற்கே படித்துப்படித்துப் பயனற்றுப்போன நம்மவர்களும் பெரிது பாராட்டினர். இன்றைய நிலைமையைப் பார்க்குமிடத்து இவ்வித நம்பிக்கைகளும் அழிந்துவிடுகின்றன. இனி இன்னவைகளை மதித்து வணங்குகின்ற ஏழை எங்குமில்லை. வில் டூரான்ட் இக்காலத்தைத் தொகுத்துக் காட்டுகின்ற சித்திரத்தினுள் இதன் காரணத்தைக் காணலாம்—

“Progress”,“universal education”, popular sovereignty”—who is now so poor in doubt as to do them reverence? Our schools are like our inventions—they offer us new ideas, new means of doing old things; they elevate us from petty larceny to bank wreckages. We taught people how to read, and they enrich the “tabloids” and the talkies; we invented the radio, and they pour out a hundred times more abundantly than before, the music of savages and the prejudice of mobs. We gave them, through technology, and engineering unprecedented wealth—miraculous automobiles, luxurious travel and spacious homes; only to find that peace departs as riches come, that automobiles over-ride morality and connive at crime, that quarrels grow bitter as the spoils increase, and that the largest houses are the bloodiest battle grounds of the ancient war between woman and man. We discovered birth control, and now it sterilizes the intelligent, multiplies the ignorant, debases love with promiscuity, frustrates the educator, empowers the demogogue, and deteriorates the race. We enfranchised all men, and find them supporting and preserving, in nearly every city, a nefarious “machine” that blocks the road between ability and office; we enfranchised all women, and discovered nothing is changed except clerical expense.”

முன்னேற்றமடைந்துள்ளன வென்று இங்கிருப்போர் மோகித்துத் திகைப்புண்டுகிடக்கின்ற அமரிக்க நாட்டில் உள்ள அறிஞர் ஒருவர் இவ்வண்ணம் அந்நிலைமையை எடுத்துக்காட்டியிருக்கும் வாசகங்கள் இத்தகையன. பல இதன்முன்னும் இவ்விதழ்களில் பெயர்த்து எழுதியிருக்கின்றோம். இதனை இவ்வாண்டின் கையுறை என்னக் கொள்ளலாம்.

தமிழ்ப்பாடம் 134.

நைடதம்—நளன்தூதுப் படலம்

[517-வது பக்கத் தொடர்ச்சி]

உருகுதங் கொழுநர்பா லூடி நீத்தநல்
விரைகமழ் தெரியலு மின்செ யாரமுங்
குருமணிக் கலன்களுங் குலவு வீதிவா
யெரிமணிப் பூணின னிடறி யேகினன். 31.

(உரை). உருகு - காதலால் உருகுகின்ற, தம்-தம்முடைய, கொழுநர்பால் - கணவர்களுடன், ஊடி - ஊடல்கொண்டு, நீத்த - அகற்றி எறிந்த, நல்-நல்ல, விரை கமழ்- வாசனை வீசுகின்ற, தெரியலும்-பூமாலைகளும், மின் செய் ஆரமும்- மின்னல்போல் பிரகாசிக்கின்ற முத்துமாலைகளும், குரு மணிக் கலன்களும் - நிறமமைந்த இரத்தினங்கள் இழைத்த ஆபரணங்களும், குலவு - கலந்து கிடக்கின்ற, வீதிவாய் - குண்டினபுர வீதியின் வழியாய், எரி மணிப் பூணினன் - தழல்போன்ற மாணிக்கங்களிழைத்த ஆபரணங்களையணிந்த நளமகாராஜன், இடறி ஏகினன்-இடறி இடறிச் சென்றான்.

விரிவுரை:-தம்நாயகர்களோடு ஊடியமாதர்கோபத்தினால்,தங்கள்மீது அணிந்திருந்த நகைகளையெல்லாம் வெறுத்தகற்றி எறிந்துவிட அவை தெருக்களில் சிதறிக் கிடக்கின்றன. ஊடலைத் தணிக்கும்பொருட்டு நாயகர் விளையாட்டாய்ச் சூட்டவரும் பூமாலைகளையுமம்மாதர் வெறுத்துத் தெருவிலெறிந்தனர்போலும். விலைபெற்ற இவ்வணிகலன்களைப் பொருளென மதியாமல் எளிதில் எறிந்துவிடுவதுமன்றி, எல்லார்க்கும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே அவைகளை வாரிக்கொள்வாரும் அந்நகரின்கண் இல்லை. இவ்வண்ணம் வியக்கும்படி செல்வத்தின்மிகுதியைப் பின்னும் மிகுத்துச்சொல்வது வீறுகோளணி ஆகும். மடவார் முலையினின்றுவழிந்த சந்தனச்சேற்றினால் வீதியிற் செல்லும் யானைகள் வழுக்கிவிழுமென்று நளவெண்பாவில் மாவிந்தநகரைச் சிறப்பித்திருப்பதும் (5-5) இவ்வீறுகோளணியே. பொருளின் பெருக்கத்தினால் வருவது இன்பமாதலால், செல்வத்தின் மிகுதியோடு பெரும்பாலும் ஊடல் கூடல் முதலிய இன்பப் பகுதிகளையும் சேர்த்துப் பாடுவார் புலவர். இவ்விடயங்கள் முன்னர் (5-5) உரைக்கப் பெற்றிருக்கின்றன.

குறிப்பு:—உருகு + தம் = உருகுதம்; கமழ் + தெரியல் = கமழ்தெரியல்— இவைவினைத்தொகைகளாதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை.

குலவுவீதி—குலவுகின்றவீதி என விரியுமாதலால் இதுவும் வினைத்தொகையே. குலவும் + வீதி, குலவு வீதி என நிலைமொழி யீற்று மெய் கெட்டது என்று எண்ணலாகாது. குலவும் வீதி எனில் அது பெயரெச்சத்தொடராகும். வருமொழி முதலில் இடையினமெய் வரப் பெயரெச்சத் தொடரில் நிலைமொழி யீற்று மகரமெய் கெடாது.

மனங்கவர் வனப்பமை வடிவி னன்றியுங்
கனம்பயில் வாயிலோர் காண்கு றுவகை

சினங்கொள்கூ ரிலையவேற் செம்மல் போதலா
லனங்கனென் றுரைப்பதற் கைய மில்லையே. 32.

(உரை). மனம் கவர் - மனத்தைக் கவர்ந்துகொள்கின்ற, வனப்பு அமை - அழகு அமைந்த, வடிவின் அன்றியும்- தன் அழகினால் மாத்திரம் அன்றி, சினம் கொள் - கோபம் கொண்ட, கூர் - கூரிய, இலை - இலைகளையுடைய, வேல் - வேலாயுதத்தையுடைய, செம்மல்-மேன்மகனாகிய நளன், கனம்பயில் - மேகங்கள் சஞ்சரிக்கின்ற, வாயிலோர்- (கன்னிமாடத்தின்) வாயிலைக் காப்பவர், காண்குறுவகை - காணாதபடி, போதலால்- (மாலிகாஞ்சனம் என்னும் மந்திரத்தின் உதவியினால் போவதால், அவனை இப்பொழுது) அநங்கன்என்று உரைப்பதற்கு-மன்மதன் என்று சொல்வதற்கு, ஐயம்இல்லையே-சிறிதும் சந்தேகம் இல்லையே.

விரிவுரை:—மாலிகாஞ்சன மந்திரத்தை உச்சரித்துக்கொண்டிருக்கும் வரையில் நளன் ஒருவர் கண்களுக்கும் தென்படான். இவ்வண்ணம் இவன் உருக்கரந்து தமயந்தியின் கன்னிமாடத்தைச் சூழ்ந்திருக்கும் மதிலைக் கடந்து உள்நுழைவதைக் கூறுகின்றது இப்பாட்டு. மதிலின்கண் உள்ள கோபுரங்கள் மேகமண்டலமுங்கடந்து ஆகாயத்தையளாவியிருக்கின்றன, என்பதைக் "கனம்பயில்வாயில்" என்னுஞ்சொற்கள் குறிக்கின்றன. அவ்வாயிலைக் காக்கின்றவர் தன்னைக் காணாதபடிநளன்செல்கிறான். இப்பொழுது அவனுக்கு உருவம் இல்லை. அழகினால் அநங்கனென்றுநளனை எப்பொழுதும் சொல்வதுண்டு. ஆனால் அவ்விருவருக்கும் இதுகாறும் ஒரு வேற்றுமை இருந்தது. அழகினால் ஒத்திருந்தனராயினும் அநங்கனுக்கு உருவம் இல்லை, நளனுக்கு உருவம் இருந்தது. இப்பொழுது அவ்வுருவமுந்தோன்றாமல் போனதால், இனிநளனை அநங்கனேஎன்று உரைப்பதற்கு யாதும் ஐயமேனும் இடையூறேனும் இல்லை,என மகிழ்கின்றார் கவி.

அநங்கன் என்பதற்கு அங்கம் இல்லாதவன் என்பது பொருள். சிவபிரான் நெற்றிக்கண்ணால் உடலம் வெந்தழியப் பின் இரதியின் வேண்டுகோளால் உடலின்றிஆவிமாத்திரம் பெற்றிருக்குங்காரணத்தால் அநங்கன் என்றபெயர் மன்மதனுக்கு ஆயிற்று. ஆதலால், அநங்கன் என்ற சொல்லிற்கு உருவம் இல்லாதவன், மன்மதன் என்னும் இரண்டு பொருள்கள் இருக்கின்றன. இப்பாசுரத்தில்நளன் உருத்தெரியாதிருக்கின்றானென்ற பொருளிலும், மன்மதன்போன்றிருக்கின்றவன் என்னும்பொருளிலும் பயிலும்படி 'அநங்கன்' என்னும் அவ்வொருசொல் வழங்கப்படுகின்ற இது சிலேடை அணி ஆகும்.

சிலேடையணியன்றி இச்செய்யுளில் தகுதியணியும் இருக்கிறது. ஒருபொருளின் குணம் செயல் நிலைமை பெயர் முதலியவைகளில்யாதானுமொன்று அதற்குத் தக்கதேயாயிற்றுஎன்று புலமைத்திறந்தோன்றுமாறு சாதிப்பதுதகுதியணியின் இலக்கணம். இவ்வணியை வடமொழியில் சமாலங்காரம் என்று அழைப்பார். "நளனை இதுகாறும் மன்மதனே என்று புகழ்வார்; அவ்வாறு புகழ்வதற்குக் காரணமாயிருந்தது அவன் அழகு; ஆனால், இவனுக்கு உருவம் இருக்கின்றதே. இவனை மன்மதன் என்று அழைத்தல் தகுமோ என்னும் ஐயமும் இதுவரையில் இருந்திருக்கலாம்; இன்றைக்கோ அவ்வுருவமும் மறைந்துவிட்டதால் இனி அப்பெயர் இவனுக்கு முற்றிலுந் தக்கதேயாயிற்று" என்று சாதிப்பதால் இது தகுதியணி.

சினங்கொள்வேல்—சினங்கொள்ளும் இயல்புஇல்லாத வேலிற்குச் சினங்கொள்ளுந் தன்மையை ஏற்றினார். பகைவரைக்கண்டால்சினங்கொள்பவன் நளன்; அவன்கை வேலன்று. ஆயினும் 'சினங்கொள்' என்னும் அந்த அடைமொழி வேல் என்பதைச் சார்ந்து நிற்கின்றது. வேல் ஏந்தும் சினமுடைய நளன் என்பதற்குப் பதிலாய்ச் சினமுடைய வேல் ஏந்தும் நளன் என அடைமொழியைமாற்றி உரைக்குந்திறமையை ஆங்கிலத்தில் டிரான்ஸ்பர்ட்எபிதேட்(Transferred epithet: example - angry sword) என்று அழைப்பர். அடைமொழியை இவ்வாறு மாற்றியமைக்கும்மரபு,"வென்றிவேல்மன்னன்""வீரவில்""மருண்மாலை" போன்றதொடர்களில்காணப்படுகின்றதேனும் இதனைக்குறிப்பதற்குத் தக்கபெயர் ஒன்றும் தமிழில் இட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆகையினால் நாம் அதனை அடைமாற்று அல்லது மாற்றடை என்று அழைப்பின்பொருந்தும்.அடைமாற்றணி என அணிகளில் ஒன்றாக இதனைச்சேர்ப்பினும் சேர்க்கலாம்.

கண்ணகன் மணிக்கடைக் காவ லாளர்தா
நண்ணினரெவரென வெவரை நாடினுந்
தண்ணறுந் தெரியலான் றன்னை யாமென
வெண்ணிவெம் மடங்கலி னெருத்தங் கோட்டுமால்

(உரை). கண் அகல்-இடம் அகன்ற,மணிக்கடை-அழகியவாயிலில் இருக்கின்ற, காவலாளர்தாம்-காவலாளர்கள், "நண்ணினர் எவர் - வருகின்றவர் யார்" என - என்று, எவரை நண்ணினும் - யாரை அணுகிக் கேட்டாலும், தண் நறும் தெரியலான் - குளிர்ச்சியும் வாசனையும் அமைந்த மாலையை அணிந்த இந்நளன், தன்னை ஆம் என எண்ணி - தன்னையே அவர் வினவுகின்றனர்என்றுஎண்ணி, வெம்மடங்கலின் - கொடிய சிங்கத்தைப்போல, எருத்தம் கோட்டும் - கழுத்தைத் திருப்பிப் பார்ப்பான்—(ஆல் - அசை).

விரிவுரை:-மாலிகாஞ்சன மந்திரத்தின் உதவியால் வாயிற்காப்பாளர்காணாவண்ணம்கன்னிமாடமதிலைக் கடந்து நளன் உட்புறத்திலுள்ள நந்தவனத்தின்வழி ஏகுகின்றான். வாயிற்காப்பாளர்தம்முறைப்படி"யார் அங்கு ஏகுகின்றார், யாரங் கேகுகின்றார்" என்று வாயிலினயல்நண்ணுவோரை,உரப்பி வினவும்சொற்கள், நளன்செவிக்கு எட்டுமளவில், குற்றமுள்ள நெஞ்சினனாதலால்,தன்னுருவம் மறைந்திருக்கின்றதென்பதை மறந்து, தன்னையேஉரப்புகின்றனர் என்று எண்ணித் திரும்பிப்பார்த்துப் பின் அவர்வேறு,எவரையோ விளிக்கின்றனரென்பதுணர்ந்து முன்னேகுவான். இவ்வண்ணம் பன்முறை நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு:-காவலாளர் தாம் + நண்ணினர் = காவலாளர்தா நண்ணினர் - நிலைமொழியீற்று மகரமெய் வருமொருமுதலில் நகரம் (மெல்லினம்) வரக்கெட்டது. (7—501)

வெம்மை + மடங்கல் = வெம் + மடங்கல் = வெம் மடங்கல். வெம்மையென்ற பண்புப்பெயர் விகாரப்பட்டு 'வெம்'என்னும்நிலைமொழியாய் நிற்கின்றது.இது தனிக்குறிலொடுசேர்ந்த மகரமெய்யை ஈற்றில் உடையதாதலால், அம்மகரமெய், வருமொழிமுதலில்மகர மெய் வரக் கெடவில்லை. (7—501).

இலக்கணம்.

C. மகரமெய்யீறு (தொடர்ச்சி)

11 I மகரமெய்யீறு + வல்லின மெய்ம்முதல்.

வல்லினமெய் ஆறினில், மொழிக்குமுதலில் வருவன, ககர சகர தகர பகரங்களே. நிலைமொழி யிறுதியில் மகரமெய்யும் வருமொழிமுதலில் வல்லினமும் வருமாயின், சிலபோது அவை, மரம் + காடு = மரக்காடு, என ஈற்று மகரமெய் கெட வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தும், சிலபோது, மனம் + கவர்ந்தான் = மனங்கவர்ந்தான், என நிலைமொழி யீற்று மகரமெய் வருமொழிமுதல் வல்லினமெய்க்கு இனமாய்த் திரிந்தும், ஓடும் + பாம்பு = ஓடும்பாம்பு என விகாரம் இன்றி இயல்பாயும் புணரக்கூடும். எப்பொழுதுகெடும் என்றும், எப்பொழுதுதிரியும் என்றும், எப்பொழுது இயல்பாயிருக்கு மென்றும் பின் வரும் விதிகளினின்று தெரிந்துகொள்ளலாம்.

(a) வருமொழிமுதல் உயிரேனும்(6-635), இடையினமேனும்(7-517)வர,எவ்வெத்தொடர்களில் நிலைமொழியீற்று மகரமெய் கெடுமென்று முன்னர்க் காட்டியிருக்கின்றோம். அத்தொடர்களிலெல்லாம், வருமொழிமுதலில் வல்லினம் வரினும் நிலைமொழியீற்று மகரமெய் கெடும் என்று கொள்க. ஆனால் வல்லினம் வருமொழிமுதலில் வருமெனின், நிலைமொழியீற்று மகரமெய் கெடுவதுமல்லாமல் வருமொழி முதல் வல்லினமெய்யும் மிகும்:—

ஆதலின் பின்வரும் தொடர்களில் மாத்திரம் நிலைமொழியீற்று மகரமெய் கெட்டு வருமொழிமுதல் வல்லினமெய் மிகலாகின்றது.

(1) ஆறும் வேற்றுமைத் தொகை:—

மரம் + கிளை = மர + கிளை = மரக்கிளை.
பழம் + சாறு = பழ + சாறு = பழச்சாறு.
கமலம் + தண்டு = கமல + தண்டு = கமலத்தண்டு.
முகம் + பொலிவு = முக + பொலிவு = முகப் பொலிவு

குறிப்பு:—நிலைமொழி வினையாலணையும் பெயராய் இருக்குமாயின் வருமொழிமுதலில் வல்லினம் வர ஆறும் வேற்றுமைத்தொகையிலும் நிலைமொழியீற்று மகரமெய் கெடாமல், அவ் வல்லினமெய்க்கு இனமான மெல்லின மெய்யாகத் திரியும்.

சிறியேம் + குறை = சிறியேங்குறை.
கண்டேம் + சிறப்பு = கண்டேஞ் சிறப்பு.

ii நிலைமொழி குறிலொடு சேர்ந்த மகரமெய்யையீற்றிலுடைய இரண்டெழுத்துச் சொல்லாயின்,வருமொழிமுதலில் வல்லினம்வர, 6-ம் வேற்றுமைத்தொகையிலும் நிலைமொழியீற்று மகரமெய் கெடாமல் அவ் வல்லினமெய்க்கு இனமான மெல்லினமெய்யாகத் திரியும்.

எம் + கண் = எங்கண்
நும் + சிரம் = நுஞ்சிரம்
தம் + தலை = தந்தலை

(2) மற்ற வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகைகள்:—

வேழம் + பொறி = வேழப்பொறி—2-ம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.
தங்கம் + கலன் = தங்கக்கலன்—3-ம் வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகை.
குலம் + கொடை = குலக்கொடை (குலத்திற்கு உரிய கொடை), 4-ம்வேற்றுமைஉருபும்பயனும் உடன்தொக்க தொகை.
இரணம் + சோரி = இரணச்சோரி இரணத்திலிருந்து வரும் சோரி (சோரி - இரத்தம்)5-ம்வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை:—
குளம் + தாமரை = குளத்தாமரை — 7-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

3. பண்புத் தொகை:—

வலம் + புறம் = வலப்புறம், வலமாகிய புறம்.
அசோகம் + தரு = அசோகத்தரு.
நீளம் + செவி = நீளச்செவி.
ஆழம் + கிணறு = ஆழக்கிணறு.

குறிப்பு:—செம்மை, வெம்மை, முதலிய பண்புப் பெயர்கள் விகாரப்பட்டு, செம் வெம் என நிற்கும் போது வருமொழிமுதலில் வல்லினம் வர, இந்நிலைமொழியீற்று மகரமெய் கெடாமல், வருமொழிமுதல் வல்லினமெய்க்கு இனமான மெல்லின மெய்யாகத் தான் திரியும்.

வெம்மை + சிலை = வெம் + சிலை = வெஞ்சிலை.
செம்மை + கதிர் = செம் + கதிர் = செங்கதிர்.

இவை வெம்மையாகிய சிலை, செம்மையாகிய கதிர் என விரியுமாகையால் பண்புத்தொகைகள்.

4. உவமத் தொகை:—

கமலம் + தாள் = கமலத்தாள்
தரளம் + பல் = தரளப்பல்.
மேகம் + குழல் = மேகக்குழல்.

குறிப்பு:—கமலம் + பாதம் = கமலபாதமென, ஈற்று மகரமெய்மாத்திரம் கெடும். நிலைமொழி வருமொழி ஆகிய இரண்டும் வடமொழிகள்ஆதலால் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது. (7-388).

(b) பின்வருந் தொடர்களில், நிலைமொழியீற்று மகரமெய், வருமொழிமுதலில் ககர சகர தகரங்கள் வர, கெடாமல், முறையே அவ்வல்லினமெய்களின் இனமாகிய ஙகர ஞகர நகர மெய்களாகத் திரியும்.

மரம் + சாய்ந்தது = மரஞ் சாய்ந்தது—எழுவாய்த் தொடர்.
ஓடும் + குதிரை = ஓடுங்குதிரை—பெயரெச்சத் தொடர்.
விளையும் + தீமை = விளையுந்தீமை—வினைமுற்றுத் தொடர்.
சொல்லினும் + கேளான் = சொல்லினுங்கேளான்—வினையெச்சத்தொடர்.
பானையும் + சட்டியும் = பானையுஞ்சட்டியும்—இடைச்சொற்றொடர்.
நிலம் + தந்தான் = நிலந்தந்தான்—2-ம் வேற்றுமைத்தொகை.
அரவம் + கடிக்கப்பட்டான் = அரவங்கடிக்கப்பட்டான்—3-ம் வேற்றுமைத் தொகை.
சுந்தரம் + தம்பி = சுந்தரந்தம்பி (சுந்தரம் என்பவனுக்குத் தம்பி)—4-ம் வேற்றுமைத் தொகை.
துயரம் + தீர்ந்தேன் = துயரந்தீர்ந்தேன் (துயரத்திலிருந்து தீர்ந்தேன்)-5-ம்வேற்றுமைத் தொகை.
நிலம் + சாய்ந்தான் = நிலஞ்சாய்ந்தான்—7-ம் வேற்றுமைத் தொகை.

சூளாமணி

[508-வது பக்கத்தொடர்ச்சி]

குமாரகாலச் சருக்கம்

அவ்விருஅரசிளம் புதல்வரும்,வரிவளைத் தோளியர் மனத்துட் காமநோ யெரிவளைத் திடுவதனை மேலே விரித்துரைக்கின்றார் தேவர். இப்பெண்கள் செக்கச் சிவந்த இதழோடும் இனிமை விளைக்கும் கடலன்ன வாயுடையவர்;இவர்கள் இதழுக்குஉப்பை விளைக்கும் கடலிலே விளங்கும்கொடிப்பவளமோ ஒப்பாவது. இம்மகளிரின் இதழன்றோ கொடிப் பவளத்தைக் கடலிற் புகவோட்டின. திரையில் அலையும் கொடிப்பவளம் துடிப்பதுபோலஇவ்வரசிளங்காளைகளைக் கண்டு காதலால் துடிக்கும் இதழுடையராய் விளங்கும் திருமேனிப் பொலிவோடும் எதிர்பார்த்துநிற்ப, அவர்களெதிரே இம்மைந்தர் போகின்றனர். அந்தப் பெண்களையும் கடைக்கண்பார்வையால் கண்டுஅருள் செய்கின்றனர்.யாதோ அவ்வருள்? உருவிலானுடைய அம்புகள் எனும்அழகிய பூக்களையே கடைக்கண்ணால் அருள்கின்றனர். காதற் கண்மலர்பட்டதும் இப்பெண்கள் காதனோய் கொள்கின்றனர் எனச் சொல்லவும் வேண்டுமோ.உருவிலான் செயலே புரிந்தும் உருவுகாட்டி நிற்கின்றனர். பூவும் பொலிவும் காட்டியது அவ் அரசிளம் புதல்வர்களின் அருளோ? அப்பெண்களின் மருளோ?

கடைக்கண் நோக்கம் இருக்கும்படி ஈது. இளைய நம்பியைக் கண்ட பெண்கள் உள்ளங்கருகி நிற்கின்றனர். அவனையே எண்ணி எண்ணி, இளைத்து அயர்ந்து உறங்குகின்றனர். அவ்வெண்ணம் தடித்துக் கனவாகத் தோன்றுகிறது. கடலொளிபோலும் அழகிய திருமேனியுடையானை அக்கனவிலே காண்கின்றனர்! விழிக்கின்றனர். அவனைக்காணுது தடுமாறுகின்றனர். அறிவுகெட்டு நிற்கின்றனர். இதனைக் கண்டார் "உங்கட்கு அறிவில்லையோ" என முடுக்க "ஐயோ எங்கள் உள்ளத்தை அவன் வலிய வவ்விக்கொண்டு போயினனே. ஒட்டையுடல் தாங்கி நிற்கிறேமே. எம்முயிரை விட்டுவிடான். ஐயோ ஒரு வேளை விட்டுவிடுவானோ" என இளம்பெண்கள் கூடிக்கூடித் தம் மெண்ணங்களை இவ்வாறு விரித்தெடுத்துரைத்து மயங்கி நிற்கின்றனர்.

உள்ளம் உளைந்து ஒருங்குகூடி மயங்குகின்றனர் கரியவனைக் கண்டவர்கள். பானிற வண்ணனைக் கண்டவர்கள், தனித்தனி நின்று தாந்தாமே யவனைத் தனித்துத் துய்ப்பதாக மனப்பால் குடிக்கின்றனர். கடலெனப் பரந்து, அவன், மகளிரிடையேயும், நின்றான். அதிலிருந்து தனித்து ஊர்கின்ற சங்கேபோல இவன் மகளிர் தம் உளத்தே தனித்தனி நின்று திகழ்கிறான். "நீரில்எழுந்த வளைநிறமேனியானும் மூத்தநம்பி, என் மனத்தே ஈதோ இருக்கின்றான்" என நனவிடையே கனவுகண்டு மகிழ்கின்றாள் ஒருத்தி. "இவனை அந்த அழகுடைய நீண்ட கண்ணுடையாள் காணின் பிரியுமோ; நம்முள்ளே யிருப்பவனைப் பிறர் ஏது காண்பது. ஆனால் கருமுகிலை மேலே தாங்கி வளர்க்கும் கொடியேபோலக் கூந்தலொடு விளங்கும் இம்மெல்லியலார் காதனோய் கொள்வ தெங்ஙனம், அவனையன்றி அந்நோய் விளைப்பாரும் இல்லையே ; பின் இவர்க்கு இந்நோய் விளைத்தவர் யார்" என்று கூறுகின்றாள். இவ்வாறு கூறுவார் பலரும் உளர்.

கண்ணாரக்காணும் அழகுடைய இவ் விளைஞர்மாட்டு, இப்பெண்களின் உள்ளத்தே நின்றும் எழுகின்ற காதலென்னும் ஊழித்தீ எங்கும் விரிகின்றது. அதனால் தண்கதிரெனும் வெண்ணிலாவின் ஒளியும் தீயாகிக் காதலரைச் சுடுகின்றது. வெண்ணிலாச் சுடுமாறு எங்கும் இத்தீவிரிந்தும், தம்முடைய நாணினைவிடாத பெண்கள் அங்கிருக்கின்றனர்.அப்பெண்ணுயிரினும், பெரியதோர் உயிர் பிறிதுண்டோ! இல்லையே; அழகு வழிபாட்டோடு நின்றுவிடுகின்றதன்றோ இவ்வன்பு. பரத்தையரில்லையே அங்கு. மணமாகாப் பெண்களின் மனம் மணம் வீசுமாறிது.

இவ்வாறு அழகுவளர வளரும் செல்வராம் அரசிளங் காளையர்மேற் செல்கிற மனத்தே எழுந்தநோய் யாருக்கு மிகுதியாய் முறுகி வளர்கின்றதெனச் சொல்லப் போமோ. ஒருத்திக்கு மற்றொருத்தியினும் ஒரு வகையில் மிக்குக் கிடக்கின்றது, அம்மற்றொருத்திக்கு அவ்வொருத்தியினும் மற்றொருவகையில்மிக்குக் கிடக்கின்றது. இன்னவாறு அழகுவளருங் கொடி போன்ற பெண்களின் உள்ளத்தைக் காயுமோர் எரி வளர்த்திடும் இளமையினை இவ்வாறு எய்தினர் இவ் விளங்காளைகள்.

இப்படி இவர்கள் வளர்ந்துகொண்டு வருகையில் அரசனும் அரசியரும் எவ்வாறிருக்கின்றனர் எனப் பார்ப்போம்.ஒருநாள்,அவ் வெற்றிநிலையில்விளங்கும் பயாபதி வேந்தன்,தன் மனைவியர் இருவரும்காதலாற் குழைந்து நிற்க அவரோடு அமர்ந்திருக்கின்றான். அந்நிலையில் அவனுடைய காட்சி எவ்வாறு தோன்றுகின்றது தோலாமொழித் தேவர்க்கு? அவர்கள் எதிரே அவ்வரசன் திருமுடி விளங்கும் தலையால் சிறக்கின்றான். சூழ்ந்து கிடக்கும் மலர்களில் நிறைந்த வண்டுகள் அம்மணத்தின் சிறப்பால் நீங்காது சுற்றிக் கிடக்கின்ற அத்திருமுடியின் நாற்புறத்திலும் மிகச் சிறந்த சுடரொளி வீசிநிற்கின்றன, அத்திருமுடியினுள்ளே மிளிர்கின்ற பெருமணிகள். அமரிகையாற்றிலே கொடியென நீண்டு பரந்துகிடக்கும் பருமணிகளைக் கொண்டுவந்து இழைத்தவைகளே யாகும் அத்திருமணிகள். அத்தகைய மணிகளின் ஒளியோட்டத்திலும்,அத்தகைய மலர்களின் மணமென்னும் வெள்ளத்திலும், இன்பத்திற்றிளைக்கும்வண்டுகளின் இயற்கைப்பாட்டினிசைப்பெருக்கிலும், அவன் வாழ்கின்றான். இயைந்தொன்றாய் இசைந்த வொரு இன்பம் இருக்கின்றபடி ஈது. ஆனால், இவையனைத்தையும் அவனுடையதாக் காது அவன் திருமுடிமேல் வைத்துக் கூறும் தேவருடைய திருக்கருத்தை ஆராய்தல் வேண்டும். அவன் தன் மனைவியரோடு கூடித்திளைக்கின்ற இன்பம் உளப்

பட. அனைத்தும் அவன் திருமுடி வாழ்வதற்கென்றே கொண்டு துய்க்கின்றான் என்று காட்டுகின்றார். பிறர்க்கென வாழும் பெருந்தகையே பெருந்தகைமை. முடிகொள் சென்னியே யன்றி முடியணி சென்னியன்று. அதனை ஒரு கடமையாகக் கொண்டு அரசாங்கம் பூண்டோனே யன்றி அதனைத் தன்னுடைமையாம் உரிமையாக அணிகின்றா னில்லை. கொற்றவன் என அவனை இந்நிலையில் சுட்டுகின்றமை, அவ்வகையால் வெற்றி பெற்றமையையும், தன் மனைவியரைக் காதற்போரில் வென்று குழையவைத்தமையையும் குறிப்பதோடு, காதலுக்கு அடிமையாயொழியாது அதனையும் உலகுக்குப் பயன்படும் வகைகளில் உருப்படுத்தி அதனை இயக்கியாள்கின்ற அவனுடைய கொற்றத்தையும் சுட்டுகின்றது.

ஈதோ பள்ளியறைதோன்றுகிறது.அழகுடையமணிகள் திகழ்கின்ற ஒளிவீசி நிற்கின்றன. எங்கும்பூமாலைகளும் பொன்னரிமாலைகளும் அழகாகக் கண்ணுக்கும் மூக்குக்கும் இன்பமூட்டித் தொங்குகின்றன. அங்கே அழகியவகையில் தீமூட்டிக்கொண்டுவருவோர் அதிலே சிறுசுடர் மின்னிமின்னிப்பொலிய அந்தத் தீயினுள்ளே அகிற்கட்டையை எறிய அப்போது வளைந்து வளைந்து அகிற்புகை எழுகின்றது. இவ்வகிற்புகை கொண்டு அப்படுக்கையை நறுமணம் ஊட்டுகின்றனர். மெல்லிய பூக்களைக் காலரிந்து படுக்கையிற் பரப்பி இருத்தலின் தித்திக்கும் தேனும் அங்கேஅளவளாவி இன்பூட்டித் திகழ்கின்றது. கீழே மெல்லிய பஞ்சுகளைப் பரப்பிவைத் திருக்கின்றார். அப்பஞ்சும் தோற்றுக் கீழோடிமறையும் அத்தகைய மெல்லியமலரணை யாகும் இது. இதன்மீது இத்தகைய இன்பங்களினிடையே பள்ளிகொள்கின்றான் அரசன். இவனுடலிலிருந்து ஓர் ஒப்பற்ற ஒளி வீசுகிறது, என்னஇது! வெயில் காய்கிறதா? இல்லை மேலே பார்த்தால் எல்லாம் இருட்டாக இருக்கின்றது. என்னவியப்பு! இவ்வாறு உறங்கும்பொழுதும் உலகைக்காக்கும் எண்ணமே உடன்முழுதும் ஒளிர அவ்வொளி கொண்டே யுலகையாளும் இவ்வரசனுடைய துயில்நிலையைக் கண்டு, முகிலினிடையே மறையினும் உலகிற்கு ஒளி கொடுக்க மாட்டாத தன் சுடரொளியைப் பழித்துக் கொண்டு முகநாணி ஓடி மறைந்துவிட்டானன்றோ அக்கதிரவன். இதனையன்றோ அரசனுடைய ஒளி எனப் புகழ்கின்றார் திருவள்ளுவர். "உறங்குமாயினும் மன்னவன் தன்னொளி, கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்" என்பர் திருத்தக்கதேவர். "காட்டிலே யானைக் கூட்டத்தை நடத்திச்செல்லுகின்ற அரசயானை, அவ்வியானைகள் துன்பமின்றி இனிதே மேய்ந்துநிற்கையில், அவற்றிற்கு யாதும் துன்பம் வாராதென்று உறுதிகொண்டபோது, நிழலிலே, அவற்றையே எண்ணிநின்றலையும் மனத்தோடே, அரைத் தூக்கம் தூங்குவதுபோல, அரசன், தன் குடிகளைத் தன் மக்களாகஎண்ணி வழிப்படுத்தி, அவர்கள் இன்பம் துய்க்கையில் சிறிது ஓய்வெடுத்துக்கொள்கிறான்" எனக் காளிதாசர் பாடுவது காண்க. பாடாண்திணையிற் பட்ட இக்கண்படைநிலையிலும் அரசன் பள்ளியறையில்துயின்றாலும் தன்குடிகளையே எண்ணி நிற்கும் உயர்வைக் காண்க. கதிரவனும் காற்றும், உலகு தாங்கும் பாம்பும் அரசனும் ஒன்றென்றார் காளிதாசர். கதிரவன் தோற்றோடினான் என்கிறார் தோலாமொழித் தேவர். காளிதாசனும், ஒருமுறை கட்டிய குதிரையையயுடையான் எனக் கதிரவனைப் புனைந்துரைப்பதால், "முதலில் குதிரை கட்டிய போதேனும் அவனுக்கு ஓய்வு இருந்தது, அரசனுக்கு அஃதும் இல்லை" என்று குறித்தேயுள்ளார் எனலாம்.

அந்நாளைய அரசரின் பொழுதுபோக்கை விரித்து உரைக்கின்றார், இவ்விடத்தே தோலாமொழித்தேவர். தூங்கிய மன்னவன் காலையில் துயில்விடுத்து அருள்கின்றான். வலிவுடைய மறவர் வருகின்றனர். பொன்னாலாகிய உடையை உடுத்துக் கச்சை இறுக இடுப்பில் கட்டி வில்லையும் கையில் பிடித்திருக்கினர். அத்தகையார் அரசனுடைய திருவடியின் முன்பிலே மெய்காப்புக்கென அங்கு வந்துள்ளார்.

அரசனும்எழுகின்றான். எழுந்ததும்முதலில் நல்ல பொருள்களைக் காணவேண்டுமென்பது அந்நாளைய கொள்கை. அதற்கென இவ்வரசன் எதிரே நற்பொருள்களைக் கொணர்ந்து வைத்திருந்தனர். அவை தம்மிடத்தே தங்கிச் சுற்றிலும் தவழ்கின்ற நல்லொளி பரந்து மிளிர அவற்றின் முகத்தே விழிக்கின்றான். பின்னர் அவன் தன் காலைக்கடனை முடித்துக்கொள்கின்றான். தாமரை போன்ற மகளிர் பல்லாண்டு கூறி வரவேற்கின்றனர்.

அந்தணர்களும் பசிய பூக்களைத் தூவி இடை இடையே வாழ்த்துக்களைக் கூறி அவன் முடிமீது நிறைக்கின்றனர். விண்ணவர்களிடையே இந்திரனே போன்று மண்ணவர்களிடையே அரசனானவனும், அவ்வந்தணர்களைச் செவ்வியபூங்கொத்துக்களில்நிறைந்த நல்ல நறுமணமுள்ள மலர்களைக்கொண்டுவணங்கி ஏத்துகின்றான்.

அரசன் பல்லாண்டும் வாழ்த்தும் பெற்றபின்னர், நறுமணம் நிறைந்த மாலையை யணிந்தோர் மூங்கிற் காம்பைக் காவற்கோலாகக்கொண்டு புகழ்விளங்கக் காத்துநிற்கும் கடைவாயில் வழியே போய் எல்லோரும் விரும்ப முரசொலி முழங்கும் வலிய படைகளையுடைய இவ்வரசன் தனது திருவோலக்கத்திற்கு எழுந்தருளுகின்றான் என்பது எல்லோருக்கும் தெளிவாகின்றது.

அவனுடைய திருவடியை வணங்கிப் "பொன்னமர் திருவடி போற்றி போற்றி" என்று கூறி அன்னம் போல மெல்ல நடக்கும் பெண்கள் எதிரே பரவுகின்றனர். இருமருங்கும் அழகிய வெள்ளுடையணிந்த மணமாகாத பெண்கள் வெண்கவரிகொண்டு வீசிவருகின்றனர். அவன் கருதிய நீண்ட கடைவாயிலின் முற்றத்தை அவ்வரசனும் அடைகிறான்.

முகில்வட்டத்தின் மேலும் ஏறிப்போகும் பற்பல வளங்கள் நிறைந்த அந்த நகரத்தைக் காப்பவனாய், நீண்ட கழலணிந்து, நஞ்சு தீற்றிய வேலையும் ஏந்தி வாழும் அந்த அரசனை, அவ்விடத்தே, மெய்க் காவலாளர் காத்து நிற்கின்றனர். வெவ்விதாய் ஒளிரும் வாளையேந்தி யுள்ளார்கள் அவர்கள்; த

கக்கட்டி நிற்கின்றனர். உடம்பெலாம் போர்வைச் சட்டையைப் பூண்டுள்ளார்கள்.

தலை இடை கடை எனும் மூன்று கடைவாயில்களைத் தாண்டிச் செல்கிறான். அவ்வாயில்களில் ஒவ்வொன்றும் நீண்டு விளங்கும் திருமுடியுடையது. அவற்றினுள்ளே நறுமணங்கமழும் நீரைத் தெளித்து பூக்களைப் பரப்பி வைத்திருக்கின்றனர். அவ்வகையால் வானவருலகையும் ஏசி இகழும் உள்ளிடத்தையுடையவாய் விளங்குகின்றன. மூன்றுவாயிலும் கடந்து அவற்றிற்கு அப்பாலே உள்ள நீண்டதோர் கூடத்தே வந்து சேர்கிறான். பலரும் கூடியிருந்த அவ்விடத்தில் "வாழி வாழி" என்று அன்னோர் எழுந்தொலிக்கும் ஓசை வானத்தின்மேலும் நீண்டு செல்கிறது.

இரவீந்திரநாதர் கட்டுரைகள்

தபோவனம்

[525-வது பக்கத் தொடர்ச்சி]

இராமனுடைய வனவாசத்தைப்பற்றி வான்மீக முனிவர் எழுதினார். இராமனுக்கும் அவனோடிருந்த லக்ஷ்மணனுக்கும் சீதைக்கும் இடையிடையே அரக்கர்கள் செய்த இடுக்கண்களைத் தவிர அவர்களுக்கு வனவாசத்தில் வேறெவ்வித வருத்தமுமில்லை. அவர்தாம், ஒரு வனம் விட்டு வேறோர்வனம் சென்றனர், ஒரு நதியைக் கடந்து மற்றோர் நதியை யடைந்தனர், ஒரு மலையை நீத்து மற்றோர் மலையை எய்தினர், கிளைகளும் இலைகளும் வேய்ந்த பன்னசாலைகளில் வசித்தனர். இரவில் நிலத்தின்மீது படுத்துத் துயின்றனர். இத்தகைய வாழ்க்கையினால் அவர்கள் சிறிதேனும் இளைப்படையவில்லை. இம்மலைகளுடனும் நதிகளுடனும் அரணியங்களுடனும் அவர்களுடைய இதயம் சம்பந்தமுடையதாகவே இருந்தது. இவைகளுக்கு அவர்தாம் அயலார்க ளல்லர்.

வான்மீகி அல்லாமல் வேறு அயல்தேயத்துக் கவி ஒருவர் இதனைவருணித்துஇருப்பாராயின், இராமன் லக்ஷ்மணன் சீதையாம் இவர்களுடைய மகத்துவத்தை அதிகமும் பிரகாசிக்கச்செய்யவேண்டும் என்னுங் கருத்துடையராய், அவர்வனவாசஞ்செய்தது மிகவுங் கஷ்டமான வொரு காரியமாய்க் காட்டியிருப்பார். மற்று, வான்மீகியோ, வனத்தில் இவர் சிறிதேனும் வருத்தமுற்றதாகக்கூறாமல், அங்கு அடைந்த ஆனந்தத்தையே மீண்டும்மீண்டும் பாடி மகிழ்கின்றனர்.

மிகுந்த பொருட்செல்வத்திற்குத் தம் உள்ளத்தை ஆளாக்கிவிட்டவர்களுடைய ஆன்மாவானது இந்நிகிலத்துடன் ஒருபோதும் இயற்கையான உறவுகொண்டிருக்க இயலாது; குடிவாழ்க்கைக்குரிய நிபந்தனைகளும் அவர் தொல்குல ஒழுக்கங்களும் எக்காலும் அவர்களுக்கு இடையூறுகளாகவே இருக்கும். இவ்விடையூறுகளுக்கிடையே அவர் பிரகிருதியில் பிரதிகூலமே பார்க்கக்கூடிய ஒருநிலைமையை அடைந்துவிடுகின்றனர்.

நம் கோமகன் இராமன்நல்ல செல்வத்தினிடையே வாழ்ந்தவன். ஆயினும் அந்தச் செல்வத்தின் பொய்யுடைய மயக்கம் ஒன்றும் அவன் உள்ளத்தை ஆட்கொள்ளவில்லை. ஆதலின், தருமத்தின் வேண்டுகோளின்படி வனவாசத்தைஅவன் மேன்மையுற ஏற்றுக்கொண்டதைக்காண்கிறோம். அவனது சித்தம் அவன் வயப்பட்டுச் சாந்தமுடன் இருந்தது, ஆதலின் அவன் நகரின்கண் வாழ்ந்த, செல்வம்நிறைந்த வாழ்க்கையின் போகங்கள், பிறகு, அரணியத்தில் அவனைப் பரதேசியாக்கித் துக்கத்தை விளைவிக்கவில்லை. அங்கு அவனைச் சூழ்ந்திருந்த புல்லும் பூண்டும் செடியும் மரமும் பறவையும் விலங்கும் அனைத்தும் ஆனந்தத்தையே அவன் இதயத்தில் பெருக்கின. இந்த ஆனந்தமானது, ஒருவன் தன் ஆற்றலைச் செலுத்தி இறைவனாக மற்றவைகளை ஆள்கின்றவொரு இன்பமன்று, போகங்களைத் துய்க்கின்ற இன்பமும் அன்று. அது ஒற்றுமை உறவினால் சுரக்குமொரு சீரிய ஆனந்தமாம். இத்தகைய ஆனந்தத்திற்கு, சுயநயங்கருதாமையுந் தவமும் அடிப்படைகளாக அமைகின்றன.

ஜனகன் மாமகள் சீதை, அயோத்தியரண்மனையில் இனிது வாழ்ந்திருந்தவள் இராமனுடனே செல்கின்றாள். செல்லுமிவள், முன்னொருபோதுங்கண்டறியாத தருக்களும் மலர்களும் படர்கொடிகளும் அவ்வனத்தின்கண் கண்ணுற்ற அளவிலே, அவைதம் பெயரும் இனமும் எவையெவையெனத் தன்நாயகனைக் கேட்கத் தொடங்குகின்றாள். இலக்ஷ்மணன் பூங்கொத்துக்களைக் கொய்துகொய்து கொணர்ந்து தருகிறான். புதுமையுடன் பெருமையுறப் பாய்கின்ற ஆறுகளைப் பார்த்துச் சானகி ஆனந்தம் அடைகின்றாள்.

நகரினைவிட்டு வனத்தை மேவியவுடன் இராமன் முதலில் சித்திரகூட பருவதத்தைத் தஞ்சமாகக்கொண்டனன். அழகிய அம்மலையையும், விரிநீர் பாயும் மாலவதி நதியையும், பறவைகளும் விலங்குகளும் கவலையின்றி வசிக்கும் வனங்களையும் கண்ட இராகவன், தான் அங்கோர் பரதேசவாசியே என்ற துயரம் சிறிதேனும் இல்லாமல், அளப்பரிய ஆனந்தமே கொண்டாடினான். மலையையும் வனத்தையும் விரும்பி மிக இராமன் பல ஆண்டுகள் சித்திரகூட பருவதத்தில் தங்கியிருந்து பிறகு ஒருநாள் அதனைச் சீதாதேவிக்குத் காட்டி, "இந்த அழகிய நற் பருவதத்தைப் பார்க்கும் போது, நான் அரசினை இழந்து நகரைத் துறந்ததுபற்றி யாதும் துக்கங்கொள்ளாமற் றிர்கின்றேன். உற்றார் பெற்றார் உறவினர்களை விட்டுப் பிரிந்து இத்துணைத் தூரத்தில் இருப்பதும் என் மனத்தை வேதனைசெய்யவில்லை" என்றான்.

சித்திரகூடத்தைவிட்டு இராமன் தண்டகாரணியத்தைச்சென்றடைந்தனன். அங்கு, தவசிகளின் ஆசிரமங்கள், ஆகாசத்தில் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டாமல் பிரகாசித்துக்கொண்டிருக்கும் சூரியமண்டலமே போல், காந்தியுங்கனமுமுடையனவாக இருக்கக்கண்டான். சகல சிருஷ்டிகளுஞ் சரண்புகு மிடங்களாக இருந்தன இவ்வாசிரமங்கள். பிரம்மமென்னுஞ் செல்வத்தினால் நிறைந்திருந்தன அவை. புனிதமான அக்குடில்களைச் சுற்றி எத்தனை எத்தனை பறவைகள் விலங்குகள் இனிதமர்ந்திருந்தன.

வனப்புடைய வனங்களிலும் புனிதமாய தவச்சாலைகளின் இடையேயும் அவரது வனவாசம் நடைபெறும் நாளில், இராமன்மீது சீதைக்கிருந்த அன்பும் சீதையின்மீது இராமனுக்கிருந்த அன்பும் அவர்களிக்கிடையே அதிகமதிகமாகப் பெருகிப்பெருகி, நாலுத் திசைகளிலுமிருந்த பறவைகளின்மீதும் விலங்குகளின்மீதும்பரவிப்பாயலாயிற்று. அன்பின் தளையினால் அவர்கள்ஒருவரோடொருவர்ஒற்றுமையடைந்ததுமாத்திரமன்றி, நிகிலப்பொருள்கள் அனைத்துடனும் ஒற்றுமைப் பட்டனர். ஆகையாற்றான், சீதையைப் பிரிந்து வருந்திய இராமனுக்கு அவ்வரணியம் முழுவதும் உதவிசெய்தது. சீதையைப் பிரிந்தபோது இராகவன் மாத்திரமன்றி அவ்வரணியம்முழுதுமே, அளப்பரிய துக்கத்தில் ஆழ்ந்திருந்தது. ஏனெனில் அப்பிரிவினால், அவ்வரணியத்திற்கு விளைந்த நஷ்டம் இராமனடைந்த நஷ்டத்தினிலும் சிறியதன்று. சீதையுடன் இராமன் வனவாசஞ் செய்தகாலத்தில், அவ்வரணியம், மனிதரின் அன்பு என்னும்ஓர் திப்பியசெல்வத்தைப் பெற்றிருந்ததன்றோ! அங்கிருந்த அழகிய தளிர்களிலும் தருக்களிலும் அவைகளின்கீழ்த் தங்கும் நிழல்களிலும் காணப்பெற்ற சாந்தமுடையசிந்தனைகள் யாவற்றிற்கும் ஒருபிராணனை அளித்தது அந்த அன்பேதான்.

ஷேக்ஸ்ப்பியர் எழுதிய As You Like It என்னும் நாடகம் வனவாசத்தைத் தன்னுள் கொண்டிருக்கின்றது; Tempest (காற்று மழை) என்னும் நாடகமும் அன்னதே. Mid Summer Night's Dream என்பதும் ஓர் அரணிய நாடகமேயாகும். இந்த நாடகங்களில், மனிதன் தலைவனாக இருந்து மற்றவைகளை ஆள்கின்ற ஆற்றலின் லீலைகள் தென்படுகின்றனவேயன்றி, அரணியத்துடன் கொண்டுள்ள அன்புடைய சம்பந்தம் தென்படவில்லை. அரணியவாசத்துடன் மனிதனது சித்தம் சமநிலை சாதித்துக் கொள்வதொன்றும் அங்குக்காண்கிலோம். இயலுமேயானால் அரணியத்தைவென்று தன்னுடைமை ஆக்கிக்கொள்ளவும், அது இயலாவிடின், அதனைவிட்டுத் துறக்கவுமே இடைவிடாமல் முயல்கின்ற காட்சியே அந்நாடகங்களில் காணப்படுகின்றது. பிரகிரிதியோடு அவ் வனங்களில் மனிதன் விரோதங்கொள்கின்றான்; அல்லது வேற்றுமைபாராட்டுகின்றான்; அல்லாக்கால் நிந்தனையுற அதனை வெறுக்கிறான். இப்படி, மனிதப் பிரகிருதியானது விச்வப்பிரகிருதியுடன் போர்புரிந்து வென்று தன் சுயாதீனத்தைப்பெற்று அந்தப் பெருமிதத்தை விளக்கிக்காட்டுகின்ற தன்மையையே ஷேக்ஸ்ப்பியரின் இந்நாடகங்களிற் காண இயலும்.

ஜான் மில்டன் (John Milton) எழுதிய சுவர்க்க நஷ்டம் (The Paradise Lost) என்பது ஆங்கிலப் பெருங்காவியங்களில் ஒன்று. மனிதரது ஆதித் தாய் தந்தையர் (Adam and Eve) ஈடன் என்னும் நந்தவனத்தில் வசித்த பான்மையை வருணிக்குமளவில், மனிதருக்கும் பிரகிருதிக்கும் உள்ள சம்பந்தம் இயற்கையான அன்புடன் இணங்கி மதுரமாக மிகப் பரந்து பிரகாசிக்கின்ற ஒரு பெருமையை அப்புலவர் எளிதில் காட்டியிருக்கலாம். ஆயினும் அவர் அவ்வாறுசெய்யத் தவறினார். அக்கவி, பிரகிருதியின் சௌந்தரியத்தை வர்ணித்திருக்கின்றார், உண்மையே; ஜீவஜந்துக்கள் அங்கு ஒன்றோடொன்று மாறுபடாமல் ஒற்றுமைப்பட்டு வாழ்ந்தன என்றுங் கூறியிருக்கின்றார், அதுவும் உண்மையே; ஆயினும், அம்மனிதருடன் அவைகளுக்கு ஒருவிதமான சம்பந்தமும் இல்லையே. முக்கியமாக அவை மனிதரது போகத்திற்காகவே சிருஷ்டிக்கப்பட்டவைகளாய்த் தீர்கின்றன. மனிதன் தன் பிரபுத்வத்தை அவைகளின்மீது செலுத்துகின்றான்; அவ்வளவே. இவ் வாதித் தாய் தந்தையர் தம் அன்பினது ஆனந்தத்தின் மிகுதியால், புல்பூண்டு செடி கொடி மரங்களுக்கும், பறவைவிலங்குகளுக்கும் எவ்வகையிலேனும் சேவை செய்ததாகவாவது, அல்லது, தம் மனோபாவனையை ஆறு மலை அரணியங்களினுடைய விதலீலைகளுடன் சம்பந்தப்படுத்திக்கொண்டதாகவாவது அக்காவியத்தினுள் குறிக்கப்படவில்லை நம் மனிதஇனத்தின் இம் முதல்பெற்றோர் வைகிய அந்தச் சுவர்க்கபூமியில், "விலங்கோ பறவையோ பூச்சியோ புழுவோ யாதும் பிரவேசிக்கத் துணியவில்லை ஏனெனில் மனிதரிடத்தி லவைகள் வைத்திருந்த அச்சம் அத்தனை" - (Beast, bird, insect or worm durst enter none; such was their awe of man) என்று ஜான் மில்டன் கூறுகின்றார். நிகிலத்துடன் கொண்ட இப்பிரிவினையின் மூலஸ்தானத்தில் ஆழமான ஓர் காரணம் இருக்கின்றது.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[520-வது பக்கத் தொடர்ச்சி]

அறிவது மறியாக் கலையின் திறமை.

தன்னைக் கொல்வித்த தம்பி தன்னயல்விழுந் தழுவ
தை வாலி கண்டனனோ யாதோ இயம்பற்கில்லை.
அவன் கருத்தெல்லாம் வேறொன்றிற் சென்றிருந்தது.
பறித்தவாளியைப்பருவலித்தடக்கையாற்பற்றி [ன்
யிறுப்பனென்றுகொண்டெழுந்தனன் மேருவையிறுப்போ
முறிப்பெனென்னினுமுறிவதன்றுமென மொழியாப்
பொறித்தநாமத்தையறிகுவானோக்கினன்புகழோன்

[மேருமலையை முறிக்கவல்லவனும் புகழ்பெற்றவனும் ஆன வாலி, கழற்றிய அம்பை, பருத்த வலிய தன் பெரிய கைகளால் பிடித்து "வளைப்பேன்" என்று எழுந்து, "நான் முறிக்கமுயன்றாலுமிது முறியமாட்டாது" எனச் சொல்லி அந்த அம்பில் செதுக்கப்பட்டுள்ளபெயரை இன்னதென் அறியும்பொருட்டுப் பார்க்கலானான்.]

மும்மைசா லுலகுக் கெல்லா
மூலமந் திரத்தை முற்றுந்
தம்மையே தமர்க்கு நல்குந்
தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே யெழுமை நோய்க்கு
மருந்தினை யிராம னென்னுஞ்
செம்மைசேர் நாமந் தன்னைக்
கண்களிற் றெரியக் கண்டான்

[மூன்றாக வகுப்பட்ட எல்லா உலகங்களுக்கும் மூலாதாரமான மந்திரமாயிருப்பதும், முழுவதும் தன்னையே கொண்டுபோய்த் தன் அடியார்களிடம் சேர்ப்பித்துவிடும் சொல்லாயிருப்பதும்,இப்பிறப்பிலேயே எழேழ் பிறவிநோயைத் தீர்க்கின்ற மருந்தாக அமைந்ததும் ஆகிய, ராமன் என்கிற செவ்விய திருநாமத்தை வாலி தன் கண்களால் தெரியக் கண்டான்.]

வாலி தன் மார்பினின்று பறித்த அவ்வாளியில் பொறித்திருக்கக் கண்டது ஒரு பெயர். அதன் மகிமையைநாம் அறியவேண்டுமென்றே இங்கிங்ஙனம் புலபடப் புனைந்து தெரியக் கூறிவைக்கின்றார் கம்பர். இந்தப் பெயரினைப் புனிதமாக்கிய அவன், மூவராய் மூவர்க்கும் முதல்வராய் நிற்கின்ற இறைவன் என்பதை, எம்பெருமானருளினால் பின்னரே இவ்வாலி உணர்ந்துகொள்ள நிற்கின்றான். அதுவரையில் நம்மையும் காக்கவைக்க இப் புலவர்பெருமான் கருதினாரல்லர். தன் மார்பினின்று அப்பகழியை வாலி பறித்த அளவிலேயே, "வாலி வந்து போர் விளைக்கும்போது வேறுநின்று எவ்விடத் துணிந்தமைந்த தென்கருத்து இது" என்று விளம்பி அவ்வாறே செய்து முடித்து நம்மெதிர் நிற்பவன் ஈசுவரன் என்னும் நினைவை நம்முடைய இதயத்தில் பொறிப்பதற்கே பாடப்பெற்ற பாசுரமாம் இது.

இராமபாணம் உடலைக் குடையும்; அவன் நாமமோ உணர்வினை இணையிலாவகை உயர்த்தி மேன்மைப்படுத்தும். இதன்முன் வாலி, சுக்கிரீவனுக் கிக்கொடுமையிழைத்ததன் கீழ்மை என்னவாயினும் ஆகுக; இராமனது பாணம் அவன் மார்பில் புக்கதேனும், அது எய்தவனது நாமம் தன் இதயத்தில் புக்கவுடன் அவன்மனம் மாண்புற உயர்கின்ற வேகத்தைக் கம்பர்,

இல்லறந் துறந்த நம்பி யெம்மனோர்க் காகத் தங்கள்
வில்லறந் துறந்த வீரன் றோன்றலால் வேத நூலிற்
சொல்லறந் துறந்தி லாத சூரியன் மரபுந்தொல்லை [ன்
நல்லறந் துறந்த தென்னா நகைவர நாணுட் கொண்டா

[கிரகஸ்த்தாசிரமத்தைவிட்டு வந்திருக்கிற இந்த மேன்மகன், என்போன்றவர்களுக்காகத் தங்களுக்குரிய வில்லின் தருமத்தைக்கைவிட்ட இவ்வீரன், பிறந்ததால், வேத நூற்களில் சொல்லப்பட்டிருக்கின்ற தருமத்தை ஒருபோதும் கைவிடாத சூரிய குலமும் தன் பழைய நல்லதருமத்தை விட்டதாயிற்றே, என்று எண்ணிச் சிரிப்புவர, வெட்கப்படலானான்]

என்ன உடனே அடுத்த செய்யுளில் அமைத்துக் காட்டுகின்றார். உயர்ந்தனன் இவ்வாலி யென்று சொற்கொண்டு வெளிப்படச் சாற்றுதல் இங்கு மிகை. இராமபிரானுக்கும் அவன்பிறந்த குலத்திற்கும் நேர்ந்த இப்பழியை நினைத்தவளவில் அவன் நாணுட்கொண்டதே வாலி மேன்மை யுறுகின்றான் என்பதை நிலைநிறுத்துவதற்குச்சாலும். நேராக ஒன்றினைச் சொல்வதினும் மேலோர் நன்மொழிகள் ஒன்றிரண்டெடுத்து நம் நினைவினைத் தக்க சமயத்தில் செலுத்தும்படி செய்தலே சீரிது. கம்பரினும்இந் நுண்மையை அறிந்தவர் பிறரிலர்; இவ்வகையில் இவர் திருவள்ளுவரின் உதவியையே பெரிதும் நாடுகின்றனர். சால்பும் பண்பும் உடைய உயர்ந்தோர்தம் இயற்கையை உரைக்கின்ற "பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக் குறைபதி யென்னு முலகு" என்ற திருக்குறள் கம்பர் நினைவிற்கு வந்தது. பிறர்பழிக்கு நாணுகின்றவர்கள் பெரியவர்; அதனோடு அப்பழி தம்பொருட் டிழைத்த ஒரு தீமையினால் நேர்ந்ததாயின்,

தம்மை யிகழ்ந்தாரைத் தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—னும்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வார்கொல் லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்

என்ற நாலடியார் நவிலும்வண்ணம், பரிகின்றவர்கள் பெருமை சான்றவர். இராமன் இப்பொழுது நிரயஞ் செல்ல நின்றனன் என்னும் ஓர் எண்ணம் பிறப்பதன் முன், அதற்குக் காரணமா யமைந்த பழியின் கொடுமையே வாலிபோன்ற வீரருக்கு விரைந்து தோன்றுதல் இயற்கை. அம்பின்மீது இராமனது பெயர் பொறித்திருக்கக் கண்ட வாலி என்ன செய்தான்! சினந்திலன்; முன்னே இருந்த சினமும் மாறிவிட்டது. புகழெனின் தம்முயிரையுங் கொடுத்துப் பழியெனின் உலகொடு வரினுங்கொள்ளா வுயர்குலத்து உத்தமன் இராமனே யல்லாது அயலொருவன், இருவர் பொருங்கால் மறைந்தொரு வாளி இடையெய்தானெனக் கண்டிருப்பானாயின் வாலி தனது ஆவி போகுமுன் அன்னவனுயிரை நமனுலகு முன்னரனுப்புவான் வெங்கதத்துடன் விரைந்து தேட ஒருகால் முயன்றிருக்கலாம். பழியொடு பழகலாற்றா இராமனே அது செய்தனன் என்ற தறிந்த அக்கணமே, வாலி தன்னை மறந்துவிட்டனன்.கொன்னேதான் கொலையுண்டனனே என்னுமந் நினைவும் அவன்பால் இனி யெழவில்லை. தன்னை நினைத்துப் பரிவது எள்ளளவுமின்றியே தன்னைக் கொல்லும்பொருட்டு இப்பெரும்பழி பூண்ட இராமனையும் அவன் தொல்குலத்தையும் நினைத்தே பரிவானாயின். இவன், மும்மைசா லுலகத்திற் கெல்லாம் மூலமந்திரத்தைத் தெரிவுறக் கண்டதன் பயனாகத் தான் சான்றோனாகிய கடமையை இவ்வண்ணம் செலுத்துகின்றான். 'இராமனும் இது செய்தானே' என்பதல்லது 'தன்னையோ இன்னணம் செய்வது' என்ன வருந்தினான் அல்லன், வெகுண்டானல்லன்-நாணுட்கொண்டனன். பிறர்பழியுந் தம்பழியும் நாணுவார்தம் சிறப்பினைப்பேசினார் வள்ளுவர். இங்குத் தன் கதிக்கு வருந்தாமல், அக்கதி தனக்கு வருமாறு செய்தவர் பூண்ட பழியினை நாணுமொரு மேன்மை வாலியின்பால் தோன்றுகின்றது. இந்நாணினை உட்கொள்ளுமகவயின் வாலிக்கு நகைவந்ததெனச் சாற்றுகின்றார்கம்பர்."எள்ளல் இளமைபேதைமைமடன் என்று உள்ளப்பட்ட நகை நான்கினுள்" இவ்வாலி செய்த இந்நகை எதன்பாலடங்கும்? எள்ளலே யாம்; இராமனையன்று; இருந்தநாளெல்லாம் இருந்து இனி இறக்கும்நாள் இந்நாள் இவ்விராமனது ஒரு பழிக்குக் களனா யமைந்த வொரு புல்லனே வாயினேன்" என்று தன்னையே எள்ளி மிக நகுகின்றான். வாலியின் வீரம் ஒழிந்தது, வாழ்நாள் கழிந்தது, அவன் தன் தம்பிக்கிழைத்த பழியும் அழிந்தது;மற்று,கடைந்தெடுத்த அமுதத்தில் தானொரு துளி பருகாமல் அமரர்க்கே அளித்துவிட்ட அவன் பெருமை இங்கிடமே பழுக்கின்ற தென்னலாம். இவ்வளவு நன்மையும் இவனுக்குச் செய்துவைத்தது அவ்வாளியில் தெரியப் பொறித்திருந்த வொரு திருநாமம்.இன்னவாறு,

வெள்கிட மகுடஞ் சாய்க்கும்
வெடிபடச் சிரிக்கு மீட்டு
முள்கிடு மிதுவுந் தானோ
ரோங்கற மோவென் றுன்னு

முள்கிடுங் குழியிற் புக்க
மூரிவெங் களிநல் யானை
தொள்கொடுங் கிடந்த தென்னத்
துயருழந் தழிந்து சோர்வான்.

[முழுகி அழுந்தத்தக்க பெரிய குழியிலே விழுந்துவிட்ட, வலிமையுடைய வெவ்விய மதங்கொண்ட சிறந்தவோர் யானையானது விலங்கோடு கிடந்ததுபோல, வலியின் வேதனையால் தளர்ந்து சோர்பவனாகிய வாலி, தான் கொண்ட நாணத்தால் கிரீட மணிந்த தான் தலையைச் சாய்ப்பான்; முழக்கமுண்டாகும்படி சிரிப்பான்; மீண்டும் நிகழ்ந்ததை நினைத்துக் கூசுவான், இதுவும் ஒரு சிறந்த அறந்தானோ என்று எண்ணுவான்.]

நாணமீதூரவூர முன்னே நகையாய் வந்தது பின்னும் சிரிப்பாக வெடிக்கின்றது. படுகுழிப்பட்ட யானையென்னத் துயருழந்து சோர்கின்றானாயினும் வாலி, இச்செய்கை அறமேதானோ வென்று ஆய்கின்றான். இராமபிரான் செய்கையல்லால், அது எவ்வகைத்தேயாயினும், தருமம் பிரிதில்லை யென்னும் மெய்ம்மையைப் பின்னர் இவன் உணரநிற்பதற் கறிகுறியாகின்ற திவ்வையம். மற்றவெல்லாம் நல்லறமாகலாம்; எம்பெருமான் எது செய்கின்றானோ அதுவே, மற்றவைகளை யெல்லாம் கீழேவிட்டு மேலாக ஓங்கி எழுகின்ற அறம் என்ன நினைக்கப் புகுந்தவர் உய்ந்தார். தாரக மந்திரத்தின் தனிப்பெரும் உதவியால் வாலி யிப்பொழுது அந்நிலையை அடைய முயல்கின்றான். முன்னே, மூவருந்தானேயாய ஒருவனாலன்றி இவ்வாளி தொடுப்பதற்குரிய ஆற்றல் பெற்றிருக்க இயலாதென்று உன்னினவன், இப்பொழுது அவனே செய்தனனாயின் இது அறமேயும் ஆதல் வேண்டுமெனக் கருதுகின்றனன். அவனை யறியாமலே, இந்த இராமன், அவன் ஆற்றலாலும்,அந்தஆற்றலேஅறமென்னும்படி அமைகின்ற முறைமையாலும், அத் தனிப்பரம்பொருளாம் இறைவனே, என்னும் சிந்தனை வாலியின் மனத்தில் எழுகின்றது. எழுதலும்,

இறைதிறம் பினனா லென்னே
யிழிந்துளா ரியற்கை யென்னின்
முறைதிறம் பினனா லென்று
மொழிகின்ற முகத்தான் முன்னர்
மறைதிறம் பாத வாய்மை
மன்னர்க்கு முன்னஞ் சொல்லுந்
துறைதிறம் பாமற் காக்கத்
தோன்றினான் வந்து தோன்ற

[என் பொருட்டாக இப்படி முறைமையினின்று மாறினானே! இன்னவாறு எல்லாப் பொருள்களுக்கும்தலைவனே மாறுவானாயின் தாழ்ந்தவர்கள் தன்மை என்ன வாகும் என்ன வாகும் என்று சொல்கின்ற வாலியின் முகத்திற்கெதிர், அரசர்களுக்கென்று பழமையாகச்சொல்லப்பட்டிருக்கின்ற தருமங்களிலிருந்து மாறுபடாமலே, வேதங்களுக்குச் சம்மதமான ஒரு மெய்ம்மையைக் காக்கலாம் என்று கருதித் தசரதன் மதலையாய் அவதரித்த இராமன், வந்து தோன்றவும்]

கண்ணுற்றான் வாலி நீலக்
கார்முகில் கமலம் பூத்து
மண்ணுற்று வரிவி லேந்தி
வருவதே போலு மாலைப்
புண்ணுற்ற தனைய சோரி
பொறியொடும் பொடிப்ப நோக்கி
யெண்ணுற்றா யென்செய் தாயென்
றேசுவா னியம்ப லுற்றான்

[நீல நிறமுடைய கார்காலத்து மேகமொன்று தன்னிடத்தே தாமரைமலர்கள் மலரப்பெற்று, கட்டமைந்த வில்லொன்றைக் கையிலேந்திப் பூமியில் இறங்கி நடந்து வருவதே போன்ற திருமாலை வாலி கண்ணுற்றான். கண்ணுற்று, புண்ணிலிருந்து வருவதுபோல் தன் கண்களிலிருந்தும் இரத்தம் நெருப்புப் பொறிகளுடன் சொரிய இராமனை நோக்கி,"என்ன எண்ணினாய் நீ மற்று என்ன செய்தாய்" என்று ஏச ஆரம்பித்தவன் பின்வருமாறு பேசுவானானான்]

ஞானத்தின் பதம்பார்த்து எதிர்வருவான் எம்பெருமான். ஓங்கறம் இதுவேதானோ என்று கொள்ளும் ஐயத்தின் வாயிலாக வாலிக்கு மெய்யுணர்வு தோன்றுகின்றதேனும், 'என்னின் முறை திறம்பினனே' என்ன அவன்மனம் ஓர்நிலையில் நிற்கமாட்டாமல் தடுமாறுகின்றது. அன்ன நிலையிலிருப்போன் முன்னர் வருகின்றான் இராகவன். அவ்வாலியின் சஞ்சலத்தையகற்றித் தெளிவிக்கவே இவன் வந்தனன் என்று கொள்ளல்வேண்டும். இல்லையெனில் இவன்வாலியினெதிர்வந்து தன்னைத் தெரிவித்துக்கொள்ளாமலே சென்றிருக்கலாமே.அவ்வாறுசென்றிலன்,வந்தனன்.

வந்து இராகவன் யாதுசெய்யக் கருதினன் என்பதில் யாதும் ஐயமில்லை. அரசருக்குரிய தரும நெறியினின்று தவறாமலேதான் இக்காரியம் இழைத்தானென்று வாலிக்கு அறிவுறுத்த வேண்டுமென்பதே இவன்நோக்கம். உண்மையில், நிகிலகோடிகள் அனைத்தையும் தன் சித்தத்தால் படைத்துத் தன்சித்தத்தால் நடத்தித் தன்சித்தமாய் அழிக்கின்ற வொரு தனிமுதற் பரம்பொருள், தன்னுடைய சித்தமே தனக்குரிய அறமாகக் கொண்ட அது, மன்னர்க்கு முன்னர்ச் சொல்லும் துறை திறம்பாமல் அச்சித்தத்தை நடத்தற்கு இயலுமோ என்று சோதித்துத் தானே அறிந்துகொள்ள அவாவியதென்னத் தயரதன் மதலையாய் வந்து தோன்றியது. மறைதிறம்பாத வாய்மை வேறு, மன்னர்க்கு முன்னஞ்சொல்லுந் துறைவேறு. ஈசுவரனது சித்தத்தின் தோற்றமே இப்பிரபஞ்சமா மென்பதும், அவன் தன் சித்தத்தைத் தான் இச்சித்தபடியே இப்பிரபஞ்சத்தில் நிகழ்த்துகின்றான் என்பது "மறைதிறம்பாதவாய்மை" யாமென்றும் இதனைத்தான்முதலறமென்றும்முன் ஓர் இடத்தில் குறித்திருக்கின்றோம். மன்னறம் அனைய ஏனைய அறங்கள், அச்சித்தத்திற்கு நம்மை இணக்கிக்கொண்டு அதனால் பிறவிப்பெருங்கடலை மனிதர் தீதின்றி இனிதுகடக்குமாறு அமைந்த சாதனங்கள். இவைதாம் 'சார்பறம்' என்று குறிக்கப் பெற்றன*. அன்ன மறை திறம்பா வாய்மையாகிய முதலறத்தினை, மன்னருக்குரியவாய் வகுக்கப்பெற்றிருக்கின்றதுறைகளாகிய சார்பறத்தினின்றும்திறம்பாமல் காக்கலாம் எனக் கருதித் தயரதன் மதலையாய்த் தோன்றி அம்முழுமுதற் பொருள், அப்படியே சாதித்தும் விட்டதாக நிலை நிறுத்துவதற்கு இப்பொழுது வாலியின்முன் வாதிக்கத் தோன்றினன் என்று கம்பர் நிகழவிருக்கும் வாலி இராமன் சம்வாதத்திற்குப் பாயிரம் கூறுவதன் பொருத்தம்,இனி இராமன்எய்ததிற்கும் தோல்வியை நினைக்குங்கால்,மிக்க நுட்பம் வா

* இப்பாகுபாட்டின் அமைதியையும் அகலத்தையும், 3 - வது வால்யூம் 154 - வது பக்கத்தில் காணலாம்.

யந்துதிகழ்கின்றது. "ஏ ஏ! பெரும, மறைதிறம்பாத வாய்மையைமன்னர்க்கு முன்னஞ் சொல்லும் துறை திறம்பாமற் காக்கவோ நின்னுலும் இயலாதுகாண்" எனக் கம்பர், நற்பொருளிற் சீரிய கூரிய தம் சொற்களைப் பரம பக்தியுடன், கதலியின் கனியினைச் சேருமொருசூசியிற்செலுத்துகின்றார். ஆதலாற்றான்வாலி நெடுமாலைக் கண்ணுற்றான் என்று இங்கு வற்புறுத்தப் பெறுகின்றது. இவ்வண்ணமிராம வேடத்தைக் கலைத்து அவனை நெடுமாலாகக் காட்டுதற்குக் கம்பர் இங்கு நேர்ந்த நுட்பத்தைக் கண்கடக்க விட்டுவிடலாகாது.

ஸர்வஞ்ஞனுகிய இறைவன், மறை திறம்பா வாய்மையை மன்னர் துறைதிறம்பாமல் காக்க இயலாதென்பதை அறியானே,—பின்னர் இதனைச் சோதித்தறிய இத்துணை முயற்சியும் தோல்வியும் எற்றுக்கென்று ஐயங்கொண்டயர்தல்நேரிதன்று. அத்துணையும் அறிவான் அவன். ஆயினும் அறியாதான் போல்பாவித்து இத்திப்பிய நாடகத்தை நிகழ்த்து மிதுவே கம்பர்தம் கலைத்திறம். இல்லையேல் நம்மனோருய்வதெங்ஙனம்!

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து 9-ம் தசகம்.

[511-வது பக்கத் தொடர்ச்சி]

10-ம் பாசுரம்.

குறுகா நீளா விறுதி கூடா வெனையூழி
சிறுகா பெருகா வளவி லின்பஞ் சேர்ந்தாலும்
மறுகா லின்றி மாயோ னுனக்கே யாளாகுஞ்
சிறுகா லத்தை யுறுமோ வந்தோ தெரியிலே.

பதவுரை:—குறுகா - குறைவடையாமலும், நீளா-விருத்தியடையாமலும்-அதாவது தன் சொந்த ஸ்வபாவத்தில் மாறுதலில்லாமலும், இறுதிகூடா - தொடர்ச்சி அறுமலும் அதாவது முடிவு பெறுமலும், எனையூழி - எத்தனை காலங் கடந்தாலும், சிறுகா-சிறியதாகாமலும்,பெருகா-பெரியதாகாமலும்-அதாவது காலத்தால் மாறுதலில்லாத, அளவில் இன்பம் - இவ்வளவே உள்ளதென்று சொல்லக்கூடாத-அதாவது அளவுகடந்த இன்பத்தை ஒருவர், சேர்ந்தாலும் -, யடைந்தாலும். இதன் தாத்பரியம்:—மிகுந்த ஆநந்தமயமான பரிசுத்தாத்ம ஸ்வரூபத்தைத் தேர்ந்தநுபவித்து அதிலே காலமெல்லா மாழ்ந்திருக்க ஏற்பட்டாலும்(இது 3, 4 அடிகளில் உரைக்கப்படுகிற பகவானிடத்தில் பணிவிடை செய்கின்ற சுகம் அற்ப காலத்தினளவானுலும், அதற்கொவ்வாதென்று நிரூபிக்கிறபடி. இங்கு, கேவலாத்மஸ்வரூபம்-அதாவது பரிசுத்தாத்மசுவரூபம் நிரந்தரமென்றும்,ஒரு காலத்திலும் புண்ணியக்ஷயத்தால் அழியாததுஎன்றும் சாஸ்திர நிரூபணம் செப்புமிடமன்று. இப்படிகளாகவே யிருக்கட்டும் என்று எதிர்வாதிக்கு இல்லாததைக்கூட ஒப்புக்கொண்டு வாத நிமித்தம் விட்டுக்கொடுத்துப் பேசும் பேச்சு).3-4 அடிகளுக்குரை-மாயோன்-சிறுகால் பகவானை ஸேவித்தாலும் அதுவே பக்தருக்குப் பரம புருஷார்த்தமாகக்கடவதாய்த் தலைகட்டி அவர்களின் மனதிற்கு ஆநந்தத்தை ஊட்டும் ஆச்சரிய சக்தியுள்ளவனுக்கே, மறுகால் இன்றி-ஒருசிறுகாலமே அக்கைங்கரியம் ஏற்பட்டுப் பிறகு மற்றொரு தடவை கிடைக்காமல் போனுலும், அவனுக்கே ஆளாகும்- அவனே பரமகதியென்று தாஸனுகிப் பணிவிடை உகந்து செய்யும், சிறு காலத்தைஉறுமோ - மேற்செப்பிய பரம புருஷார்த்தமான அவனது பணிவிடையி லீடுபடும் சொற்ப காலத்தின் ஆநந்தத்துக்கு ஒக்குமோ? அந்தோ-இதைச் சொல்லவேண்டி வருவதே யென்று பரிதாபப்படுகிறபடி, தெரியிலே - நன்றாக உணர்ந்தவருக்கிப்பொருள் தெரியச் சொல்லவேண்டுமோ?

விசேஷக் குறிப்பு:—இப்பாசுரத்தின் முதல் இரண்டடியில் குறித்திருக்குமின்பம் அளவில்லாமலிருப்பதைப்பற்றியும் சுபாவத்தில் குறைவு விருத்தி யில்லாததின் நிமித்தம்பற்றியும் காலத்தால் மாளாததைப் பற்றியும் பரலோகமாகிய வைகுண்டத்தில் அமரர்களநுபவிக்கும் நித்தியாநந்தமாகத் தோற்றுவிக்கிறது. வைணவ ஸம்பிரதாயமுறை தற்காலம் நடைபெறுவது இவ்வாழ்வாரைத் தலைமையாகவுடையது. அவர்கள் ஒருங்கே கலாபேதமன்றிக்கே எல்லாக் கிரியா கலாபங்களிலும் "பிரபந்ந ஜநகூடஸ்தரான நம்மாழ்வார் திருவடிகளே சரணமென்று" முதல்முதல் வழிபடுவதை இன்றைக்கும் காணலாம். இவர் மதத்தில், மோக்ஷஸ்வரூபம், பகவானுக்கும் அவன் அடியார்களுக்கும் வாய்ப்பதன்றி இவர்கள் ஸ்வயேச்சையாய்த் தம் மனோரதத்திற்காகச் செய்கின்ற தொண்டுகளும் உள்ளடங்கியது. இத்தொண்டு புரிவதையே பாசுரத்தின் 3-ம் 4-ம் அடிகள் பேசுகின்றன. இவ்வண்ணம் குறிப்பிட்ட "ஆள்" செய்கை, அதாவது பக்தனறியாமலே தனக்குத்தானே உள்களித்துப் புறப்படும் தொண்டு, வைகுண்டத்திலேயேநடைபெறவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. இவ்வுலகத்தின்கண்ணும் ஜீவிக்கையிலே யாகலாமெனக் கொண்டால் ஆழ்வார் இவ்வுலகத்தில் தொண்டு செய்து ஆநந்தபரிதராய் இருக்குமிருப்பே தனக்கமையுமென்று பாடியிருக்கிறரெனப் பொருள்கொள்ளக்கூடாதாவென்றுசங்கைஎழலாம். ஆனல் இப்படி அர்த்தங்கொள்ள இதற்கு முன் பாசுரம் இடம்தாராது. அதில், தன்னை வைகுண்டத்துக்குக் கூவிக்கொள்ளுங் காலம் இன்னங் குறுகாதோவென்று முறையிட்டு வருத்தப்பட்டஇவர் தம்மைச் சாவகாசமாய் அவ்விடம் கூவிக்கொளற்குச் சம்மதி தருவாரா? இது நிற்க: மற்றொரு முக்கிய கருத்தை உட்கொண்டே பூர்வ உரைகாரர் முதல் இரண்டடியில் கூறுமின்பம் பரிசுத்தாத்ம ஸ்வரூபத்தைக் குறிக்கிறதென்று தீர்மானித் துரைவகுத்தார்கள். அதுவென்னெனில், இவ்வாழ்வார் பரிசுத்தாத்ம சுவரூபத்தை (4-9-10)ல் "தெரியவரிய அளவில்லாச் சிற்றின்பம்" என்றும் பின், (1-2-5)ல்இவர் பக்தியோகத்தை உபதேசிக்கப்புகுகையில் பஞ்சேந்திரியங்கள் நுகரும் விஷயங்களில் அவைகளுடைய பற்று அறுக்கும்பொழுது பரிசுத்தாத்ம சுவரூபம்தோன்றும்; அதுதுக்கக் கலப்பில்லாதஸுகமென்று நினைத்து அதிலூன்றுதே. விஷயங்களின் ஸங்கத்தை விடும்போது இதில் ஆதரவு பற்றுமல் எம்பெருமானைப்பற்றிவிடவேண்டுமென்று

கற்பிக்கிறார். இவருக்கு இவ்வின்பம், சிற்றின்பங்களுடன் ஒருபடித்தாய நிஷித்தமான இன்பமாம். மேலும் இப்பரிசுத்தாத்ம சுவரூபம் 8-ம் திருவாய்மொழி 8-ம் பத்து 8-9, பாசுரங்களில் யோகாப்பியாசத்தால்காண்பது அருமையாய் யாரோ ஒருவருக்கு ஆகலாமே தவிர அரிதிற் கிடைப்பதென்றும், தமக்கு எம்பெருமான் அதைத்திருவருளால்காட்டிக்கொடுத்தானென்றும்,அதனைக் கண்டவர்கூடத் தெரியச்சொல்லலாகாதென்றும் அது நிலைநிற்கவேண்டில் உயிர்நீங்கும்போது பகவானோடு ஒத்ததாக அதை ஸ்மரித்து அவனது அருளினை வேண்டவேண்டுமென்றும், இது மரணாவஸ்தையில் அஸாத்திய மென்றும், ஆகையால் கைக்கெட்டுவ தல்லவென்றும் இதைவிட்டொழிவதே யுக்தமென்றுங் கற்பிக்கிறார். ஆனல் இப்பாட்டில்அதைச் சிலாகிப்பதேன் என்றால், விஷய சுகங்களிலும் ஒருவாறுமேலதானபடியால் அதைப்பற்றிக் காலம்கழிக்கலாகாதா வென்ற சங்கைக்குப் பதிலளிக்கிறபடி.

11-ம் பாசுரம்

தெரிதல் நினைத லெண்ண லாகாத் திருமாலுக்
குரிய தொண்டர் தொண்டர்தொண்டன்சடகோபன்
தெரியச் சொன்ன வோராயிரத் துள்ளிப் பத்தும்
உரிய தொண்ட ராக்கு முலக முண்டாற்கே.

பதக்குறிப்பு:—தெரிதல்-கலக்கமற்றுத்தெரிந்த ஞானத்தாலே யாதல், நினைதல்-நல்லதின் வண்ணம் சிந்தனை செய்து மனதால் உணர்தலாதல் இன்னவைகளால், எண்ணல் ஆகா - அளவிடக் கூடாததான மஹிமையுள்ள திருமாலுக்கு, உரிய- மற்றவர்க்கு ஆள்படாத, தொண்டர்...சடகோபன் - தாஸாநுதாஸனை அதிசிரேஷ்டரான ஆழ்வார், தெரியச் சொன்ன - எம்பெருமானின் மஹிமையையும், இவ்வுலகின் இழிவான வாழ்க்கைத் தோஷத்தையும் விசதமாகத் தெரிந்து உரைத்த, ஓர் - விலக்ஷணமான - உரிய தொண்டர் ஆக்கும்-வேறு கலக்க மில்லாமல் எம்பெருமானுக்கே ஆளாக்கும், உலகமுண்டார்க்கு - வைத்து ரக்ஷித்த வெம்பெருமான், இது சிருஷ்டிகளுக்கும் உபலக்ஷணம். இத்திருவாய்மொழி தானே எம்பெருமான் குணங்களுக்குத் தோற்றுப் பக்தர்களை அடிமையாக்குமென்று கருத்து.

சுருக்கம்:—இத் திருவாய்மொழியில் நம்ஆழ்வார் எம்பெருமானுடைய குணவிபூதிகள் அவனை ஒருநாளும்விட்டகலவொட்டாதபடி பக்தர்களைப் பின்பிறப்பிலும் அவன் விஷயத்திலேயே ஆழ்ந்துஉவந்து பணிசெய்ய அபேக்ஷிக்கச் செய்யுமென்று கூறுகின்றார்.

காலம்

[524-வது பக்கத் தொடர்ச்சி]

யாண்டு

பண்டைத் தமிழ்மக்கள் நிலத்தைப் பகுத்துக்கொண்ட முறையில் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற வரிசையே ஏற்புடைத்தாயினும் நமது தொல்காப்பியனார் அகத்திணையியலில்,

மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே

(தொல். அகத் - 5.)

என்று முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென வரிசைப் படுத்தி இருக்கின்றனர். அவ்வகத்திணைக்குரிய பொழுதைப் பகுத்து அடைவு செய்யுமிடத்திலும்

காரும் மாலையும் முல்லை குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்.

(தொல். அகத். 6)

என்று முல்லையையே முதலாக வைத்து அதற்குரிய பொழுது காரும் மாலையும் என்று இம்முறையே வகுத்திருக்கின்றனர். இவ்விடத்து உரைசெய்கின்ற நச்சினார்க்கினியரு மிவ்வரிசையேஏற்புடையதென்றுஅவர் காட்டு மடைவு வருமாறு:—

"இனி ,முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்ற முறை என்னையெனின் இவ்வொழுக்கமெல்லாம் இல்லறம்பற்றிய வொழுக்கமாதலின், கற்பொடுபொருந்திக் கணவன்சொற் பிழையாது இல்லிருந்து நல்லறஞ்செய்தன் மகளிரது இயற்கை முல்லை யாதலின் அது முற்கூறப்பட்டது. எனவே முல்லை என்ற சொற்கும் பொருள் இருத்தலாயிற்று. 'முல்லை சான்ற முல்லை யம்புறவின்' என்பவாகலின்" என்பதாம்.எனவே இவரதுரையும் மாந்தர் வாழ்க்கை தொடங்குங் காலம் இக் கார்காலமேயென்றும் அக் கார்காலமே யாண்டின் தொடக்கமாதல் வேண்டுமென்றும் நினைத்தற் கிடந்தருகின்றது.

மற்றும், அந் நச்சினார்க்கினியரே "இக்காலங்கட்கு விதந்து ஒரு பெயர்கூறுது வாளாகூறினர். அப்பெயர் உலகவழக்கமாய் அப்பொருள் உணர நிற்றலின். கால உரிமை எய்திய ஞாயிற்றுக்குஉரிய சிங்கவோரை முதலாகத் தண்மதிக்குரிய கர்க்கடக வோரையீறாக வந்து முடியுந்துணை ஓர் யாண்டா மாதலின் அதனை இம்முறையானே அறுவகைப்படுத்தி இரண்டுதிங்கள் ஒரு காலமாக்கினர்" என்றுரைத்திருப்பது மிங்குத் துணை செய்கின்றது.

இதன்றியும் வடமொழி வர்ஷ மென்பது கார்ப் பருவத்தையும் யாண்டையுங் குறித்து நிற்பதும் இக் கருத்தைவளர்க்கின்றது. "நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும் வானின் றமையா தொழுக்கு" என்ற வள்ளுவனாது வாய்மைக் கேற்ப உலக வாழ்க்கைக்கின்றியமையாத மழையுடையது வர்ஷிது (கார்ப் பருவம்) ஆதலால் அக்காலத்தின் சிறப்பு நோக்கியே வர்ஷமென்று வடநூலார் அக்கார்ப்பருவப் பெயராலேயே யாண்டையுங் குறித்தனர் போலும்.

இவைகளே யன்றி இதனை நிறுவுதற்குரிய பிறசான்றுகளு மிருக்கின்றன. நாம்தொடங்குஞ் செயலுக்கெல்லாங் காப்பாக முதலில் விநாயகரை வணங்குவது நம்மனோர் இயல்பு; அவ் விநாயகர் வணக்கமாக

199184

அமைந்த விநாயகபூசையுங் கார்ப்பருவத்திலேயே யாதலின் ஓராண்டளவும் நாம் செய்யுந் தொழிலனைத்தினுக்குங் காப்பாய விதனை யாண்டின் தொடக்கத்தில் இயற்றிவந்தனர்என்றுரைப்பதுந் தவருகாது. மற்றும் மறையோரெல்லாம் மறையை யோதத் தொடங்குவதாகிய ஆவணி யவிட்டம் (சிராவணம்) ஆற்றுவதும் கலைகளின் கடவுளாகிய கலைமகளை வழிபடுவதும் இக் கருத்திற்கே துணை செய்யும். கொல்லம் ஆண்டு ஆவணியிலிருந்து தொடங்குவது மிப்பழக்கத்தைத் தழுவியதேயாகுமென்று கருதற்கும் இட மளிக்கின்றது.

இக் கார்காலமே யன்றிச் சரத் (கூதிர்) காலமும் ஒரு காலத்து யாண்டின் தொடக்கமாகக் கொள்ளப் பட்டிருக்கவேண்டு மென்றுந் தோன்றுகின்றது. இக் கருத்திற்கும் நச்சினர்க்கினியாருரை ஒருவாறு சிறிது உதவி செய்கின்றது. "புணர்தலின்றி இல்லறம் நிகழாமையிற் புணர்தல் பொருட்டாகிய குறிஞ்சியை அதன் பின்வைத்தார்" என்ற அவரதுரையைச் சிறிது சிந்திப்போமாயின் குறிஞ்சியே மற்றெல்லாத் திணைக்குங் காரண மாதலின் அக்குறிஞ்சிக்குரிய சரத் (கூதிர்) காலமும[illegible] கொள்ளப்படுவதிற்குறையொன்று [illegible]ரும்.

மேலும், புறப்பொருள[illegible] கூதிர்ப்பாசறை என்ற ஒருதுறை, "கூற்றனையா[illegible]வியன்கட்டேர்க் கூதிர்வான் நளிவழங்க, வாற்று[illegible] னிபெருகவும் அயில்வேலோன் அ[illegible] ஒர் மனைக்கிழத்தியின் பிரிவிற்கிரங்குதலை யொழிந்த செய்தியை யுரைப்பதிலிருந்தும் இத்தகைய பிறவற்றிலிருந்தும் கார்காலம் முழுவதுமில்லிருந்து நல்லறம் புரிந்து அமர்ந்திருந்த ஒருவன் மழை யோய்ந்ததும் மறுவருஷத்திற்குத் தான் தேடவேண்டிய பொருள் புகழ் முதலியன குறித்து ஏகுந் தகுதியுடையது கூதிர்காலமே என்றேற்படுகின்றது. கவிச்சக்கரவர்த்தியாகிய காளிதாசனும் ரகுவம்சம் 4-வது சருக்கத்தில் "சரத்—கூதிர்காலம்—யுத்தயாத்திரையின்பொருட் டேவியது" என்கின்றான். ஆகவே மழை ஓய்ந்தவுடன் அவரவர் தங்கள் தங்களுடைய தொழில்களைத் தடையின்றி ஈடேறும்வகைத் துணை செய்தற்குச் சரத்காலமே முதன்மையாகியதாதலின் அப்பருவம் முதலாகவே யாண்டைக் கணக்கிட்டனர் என்றுரைப்பதும் மிகையாகாது. வடநாட்டார் புதுக்கணக்கிடும் முறையும் இதனை வலியுறுத்தும்.

அன்றியும், வேத வழக்கிற் சரத்தென்பது யாண்டென்னும் பொருளிற் பெருவரவினதாகக் காணப் படுகின்றது. "நந்தாம சரதః சதம்" முதலிய பலவிடங் களுண்டு. இக்குறிப்புக்களெல்லாஞ் சரதரிது, அதாவது, கூதிர் காலத்திலிருந்து தொடங்கிய யாண்டுக்கணக்கு, வர்ஷரிது, அதாவது, கார் காலத்திற்கு மாற்றப் பட்டிருக்கவேண்டுமென்றும் அது தமிழ்நாட்டிற் கார் காலத்திலே நிலைபெற்றிருக்க வேண்டுமென்றுந் தோற்றுவிக்கின்றன. இக்கருத்தொடுபடுமிடத்துக் கலைமகள் வணக்கமாகிய சரஸ்வதி பூசையை, யாண்டுமுழுவதுந் தாம்கற்ற கல்வியின் திறமையைப் பலர் அறியக் காட்டுமொருகாலமாகக் கொண்டிருந்ததாகவே யேற்படும். இந்தக் காலத்திய நவராத்திரி விசயதசமிகளின் கொண்டாட்டமு மக்கருத்தே தோற்றுவிக்கின்றது.

ஆயினுமவ்வருஷாரம்பங் கார்காலத்தேயே நிலைபெற்றிருப்பதிலிருந்து நம் முன்னோரில்லிருந்து நல்லறஞ் செய்தலே ஏற்றமுடையதென்று கருதியமை தெரியலாம்.

இவ்வருஷாரம்பம் இங்கிருந்து சித்திரைக்கு மாறியது எங்ஙனமென்னின், வேள்விகளை விரித்துரைக்கும் யசுர்வேதம், வசந்தம் அஃதாவது இளவேனிற் காலத்தை வேள்விக்குரிய காலமாக வகுக்கின்றது. அவ்வசந்தமும் இன்னதென உரைக்குமிடத்துப் 'பங்குனிப்பூரணையின் அடுத்தநாளும் யாண்டின் தொடக்கமாகலா"மென்று யாண்டின் தோற்றுவாயையுஞ் சித்திரைக்கு மாற்றுகின்றது. இம்மாற்றத்திலோரளவு நியாயமுமிருக்கின்றது. கதிரவனது கதிநோக்கி யாண்டைக்கணக்கிட்ட நம்முன்னோர் அக்கதிரவன் நமக்கு நேராகச்செல்லுகின்ற காலங்களுள் ஒன்றாகிய ஐப்பசியை வருஷத்திற்கு ஆரம்பமாகக் கொண்டனர். கூதிர்காலத்திய அம்முதன்மை பின்பு ஒழுக்கச் சீர்திருத்த மேற்பட்டகாலத்தின் கார்காலத்திற்கு மாறிவிட்டது. அதன்மேல், வேள்வியின் சிறப்புமல்கிய மற்றொரு காலத்திலே அம்முதன்மை இளவேனிற்கால வசந்தத்திற்கு மாற்றப்பட்டது. இதுவும் கதிரவன் நமக்கு நேரே செல்லுங்காலங்களுள் ஒன்றாதலின் அம்மாற்றமும் தக்கதென யாவராலும் மதிக்கப்பெற்றது. கதிரவனதுசெலவும் ஐப்பசியில் முகிலால் மறைக்கப்பட்டு நன்கு காணப்பெறாமையின் சித்திரையே அதற்கு ஏற்றதொரு காலமாகவும் ஆகியது. அவ்விடத்துஞ் சாந்திரமானங் குறைபாடுடையதாகத் தோன்றவே மேடமுங் கதிரவனு மொன்றுசேரக் கூடியதாமொரு காலத்தை யேநாம் வருஷாரம்பமாகக் கொண்டிருக்கின்றோம்.

முடிவுரை

ஈண்டுரைத்த இவ்வாற்றாற் காலத்தி னியல்புதான் இன்னதென்பதும், அக்காலத்தினிடத்து நாள் முதலிய பாகுபாடெல்லா மியற்கை யமைப்பை யொட்டி நமது வழக்கிற்காக நம்மாற் கற்பித்துக்கொள்ளப்பட்ட வெறுந்தோற்றமே யென்பதும் ஒருவாறு உணர்த்தப் பெற்றன. இவ்வுணர்வுதா னென்ன பயத்ததோ வெனின்,

> "எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு" (குறள் - 355)
> "இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
> மாசறு காட்சி யவர்க்கு" (ஷை 352.)

என்ற மறைமொழிகள், உண்மை யறிவுதான் இன்னதென்பதையும் அவ்வுண்மையறிவும் ஒவ்வொருவருக்கு மின்றியமையாததே யென்பதையும் தெளிந்த வறிவுடையார்க்கே நிலைத்த வின்பங் கைகூடு மென்பதையும் விளக்கியிருத்தலின் நாம் உலகியற் பொருள்களினொவ்வொன்றையும் ஆராய்ந்து அறிவது இன்றியமையாததாயிற்று. இவ் வுலகியற் பொருள்களெல்லாந் திரவியம் குணம் கர்மம் சாமானியம் விசேடம் சமவாயம் அபாவம் என்ற வெழுகூறாக்கி அவற்றினியல்பு கூறுந் தருக்கநூலோருங் காலத்தை யொரு திரவிய மென்றனர். ஆகவே காலமென்னும் பொருள்பற்றி யுண்மை நிலையுணர்வதும் வேண்டப்படுவதொன்றாயிற்று. அத் தருக்கநூற்பயன் கூறுமிடத்து

அவர் "உலகியற் பொருளனைத்தும் உள்ளவாறுணர்ந்த பின்பே இவையனைத்தினும் வேறானது மெய்ப்பொருளென்றுணர்வதும் அதனிடத்துண்டாகியமெய்யுணர்வு நிலைத்திருப்பதுங் கைவரப்பெறு"மென்று மறைமொழி மேற்கோள் காட்டி நிலைநாட்டியிருக்கின்றனர். அவ்வாறு நாம் மெய்ப்பொருளுணர்ச்சி பெறச் செல்லுகின்றவிடத்துக் காலத்தினுண்மையுங் காண்பதுஇன்பம்பயப்பதாய ஓர் நெறியாகின்றதென்பது சொல்லாமலே அமையும். இவ்வுண்மைப்பொருளறியும் பணியிற் சிறிதளவேனும் ஆற்றப் பெற்றதெனக் கொள்வார் கொள்க.

இன்றேல், இக் காலமென்பதொன்றிலேயே நம்முன்னோர் அடைந்திருந்த தெளிவு நோக்கிப் பிறநாடுகள் நாகரிகமின்னதென்றும் அறிந்திராத காலத்திலேயே பல்லாயிர வருடங்களுக்கு முன்னரே நமது தமிழ் மக்கள் சிறந்த நாகரிகமும் தெளிந்த அறிவும் நனி படைத்தவர்களாகத் திகழ்ந்தனர் என்பதறிந்து மகிழ்வார் மகிழ்க.

அதனையும் விரும்புவரேல் நம்முன்னோரிவ்வளவு சிறந்த நாகரிகமுந் தெளிந்த வறிவும் படைத்திருந்துமிப்பொழுதோ நாம் பேதையரைப்போற் பிறர் கையைப் பார்த்தவண்ணம் அவர் நமக்கொன்றுந் தந்திலரே என்றேங்கி யிருப்பதும் நமது குறையேயன்றோ என்று நம் முன்னோரடைந்திருந்த நிலையினும் மேலானநிலையை, பிறநாட்டினரினும் உயர்வான நிலையை, அடைதற்கு நாம் முயலல் வேண்டுமென உழைப்பார் உழைக்க. எவ்வகையிலேனு மிச்சிறு பணிதான் அனைவர்க்கும் பயன்படுவதாகுமாயின் அஃதே யாம் பெறத்தகும் பேறாகுமென்பது துணிபு. இறைவனு மவ்வாறே யருள்புரிவானாக.

வேண்டவே வேண்டா

(சிறு கதை)

ஆசையென்பது முற்றிலும் அற்றவர் எத்தனையோ பலர் தம் நாட்டில் உளர் என்று தன் அரசன் மகிழும்படி விளம்பிவிட்டான் மந்திரி. அரசனோ, இச்சகமொழியிதுவென அயிர்த்து "நாளை மாலைக்குள் அன்னவன் ஒருவனைக் காட்டாயானல் உன் தலையை இழந்தனை" என உரப்பினன்.

இறங்கிய தலையுடன் வந்து அயர்ந்திருந்த மந்திரியை நோக்கி அவன் நன்மனையாட்டிக் காரணம்வினவ அவன் உற்றதுரைத்தலும் இவள் இளநகை புரிந்து, "தலைவ, இதற்கோ இத்துணையஞ்சி வருந்துகின்றனை! ஆயிரம் பொன்னிற்கு இந்தப் பொய் சொல்லாமாட்டா ஒரு ஏழை இந்நகரில் இல்லாமலோ போயினன். மற்றவெல்லாங் காக்கின்ற மந்திரிமார்களுக்குத் தம் தலைகாத்துக்கொள்ளத் தெரிவதில்லை போலும்" எனச் சாற்றினள். மந்திரிக்குத் தன்னுயிர் மீண்டுவந்தது.

மறுநாட்காலையில் மலர்ந்த முகத்தோடு அரண்மனை சென்ற மந்திரி, "அரசனே, ஆசையற்ற மேன்மையோனொருவன் அங்கு ஓர் சிறுகுடிலில்வாழ்கின்றான். ஈண்டு வாரான் அவன். வருவாயேல் நாம் சென்று நோக்குவோம்" என்றனன். அரசனும் இணங்கினன்.

ஆயிரம் பொன்னிற்கு அவாவிய அவ்வேழை, பொய்யுடன் பதைக்கும்நெஞ்சினனாய் குடிலின் முன்புறம் அமர்ந்திருக்க, அரசன் அவனை அணுகி, உணவு ஆடை முதல் தன்னுடைய அரசு ஈறாக ஒவ்வொன்றையும் "தந்தனென், பெறுவாயோ" என்று வினவ, இவ்வறியவன், மந்திரியின் முகத்தைப் பாராதான் போல் பார்த்துப்பார்த்து, "அது, வேண்டா, அது எனக்கு வேண்டா" என, "வேண்டும் வேண்டும்" என்று அவ்வேழையுள்ளம் கதறுகின்றதேனும், உறுதியுடைய நாவினல் பொய்யே மறுத்துவிட்டனன்.

கேட்டனன் அரசன். இவனைக் கண்டநாள் புனிதமென்று எண்ணினன். எண்ணி, அவனை வலம்வந்து அடிபணிந்து, "இத்தகைய மனத்தூய்மை நான் எய்தும்நாள் எந்நாளோ" என்று ஏங்கி அகன்றனன்.

மந்திரி தான் உரைத்தபடி ஆயிரம் பொன்னைக் கொணர்ந்து அவ்வேழையின் முன் நீட்டினன். இவனோ ஒருமுறை மந்திரியை மேல் கீழுற நீக்கி, "வேண்டவே வேண்டா" என்றுமறுத்து உட்சென்றுதன் குடிலின் கதவினை இறுகத் தாளிட்டடைத்தான்.

இப்புறம் நின்ற மந்திரி இன்னுந்தன் திகைப்புத் தெளிந்து அவ்விடம்பெயர்ந்து அகன்றிலன்.

கம்பராமரயணம்:—பதவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு, முதலியவைகளுடன் ஸ்ரீ. வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை. பால காண்டம் ரூ. 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரணிய காண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0. சுந்தர காண்டம் ரூ. 5. யுத்த காண்டம் 2-பாகம் ரூ. 10. தபால் செலவு வேறு.
கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளீவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
மடச்யாவனப்ராசா மடபிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) மடமெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
மட ச்யாவனப்ராச ‑ சிறந்த டானிக் ‑ சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்க்கதிற்றமையை எண்ணெய் காஸ்டாலைக்ஸ்
ஜ்வரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

கலாநிலயத் தமிழ் வகுப்பு—திருவல்லிக்கேணி

இவ்வகுப்பு, சென்னை, திருவல்லிக்கேணி, சிங்கராசாரி தெருவில் இருக்கும் N. சாமராவ் பள்ளிக்கூடக் கட்டிடத்தில், இந்த நவம்பர் மாதம் 9௳ வெள்ளிக்கிழமை, மாலை 7-மணிக்கு ஆரம்பமாகி, அன்று முதல் ஒவ்வொரு வாரமும் செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் மாலை 7-மணி முதல் 7-45 மணி வரையிலும் நடைபெறும். சேர விரும்புவோர் வந்து சேர்ந்துகொள்ளவும்.

வர்த்தமானம்

ஜேர்மனியில் நமது சாமியார்:—லண்டனிலுள்ள கௌடீய மடத்தைச் சேர்ந்த சாமியார் ஒருவரைக் கெயிசர் சக்ரவர்த்தி அழைத்திருக்கின்றார். ஜெர்மனி தேசத்துச் சர்வதிகாரியான ஹிட்லரும் மேற்படி சாமியாரைத் தமது அரசாங்க விருந்தினராக வரும்படி அழைத்திருக்கின்றாராம். நவம்பர்மீ 2௳ சர்வாதிகாரி ஹிட்லர், சாமியாருக்குப் பேட்டி அளிப்பாராம். பெர்லினில் நவம்பர் மாதம் 6-ந்தேதி மேற்படி சாமியார் ஜெர்மனிக்கும் இந்தியாவுக்கும் நட்புரிமை வளர்வதற்காக ஏற்பட்டுள்ள பிரசாரக் கமிட்டியார் முன் ஒ[illegible]சாற்பொழிவு நிகழ்த்துவாராம். அப்பொழுது ஹிட்லரின் நண்பர்கள் பலரும், அதிகாரிகள் பலரும் விஜயஞ் செய்வார்களாம்.

* * *

95-ல் உத்தியோகம்:—இங்கிலாந்தில் வீமத் என்னும் இடத்தில் ஆல்ப்ரட் பென்னிஸ் என்பவருக்கு வயது 95. அவர் இன்னும் மாஜிஸ்ட்ரேட் உத்தியோகம் நடத்தி வருகிறார்.

* * *

மலையுச்சியில் பெருங் கொடி:—ஜப்பான் தேசத்தில் பூசியாமா என்ற புனித மலை ஒன்று இருக்கின்றது. அதன் உச்சியில் உலகத்திலேயே பெரிதான ஜப்பான் கொடி ஒன்றை உயர்த்துவதற்காக ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது. அச் சங்கத்தார் 80 அடி நீளமும், 56 அடி அகலமும் உள்ள ஒரு பெரிய ஜப்பான் கொடியைச் செய்து வருகிறார்கள். அதனை விரைவில் அந்த மலை உச்சியில் நாட்டப் போகிறார்களாம்.

* * *

129-ல் மரணம்:—தென் ஆப்பிரிக்கா திரான்ஸ்வால் பகுதியில் 1805-ம் ஆண்டில் பிறந்த ஒரு சுதேசி மாது சென்ற மாதத்தில் தமது 129-ம் வயதில் காலமானார். அவர் கடைசிப் பிள்ளைக்கு வயது 90. அவ்வம்மையாருக்குக் கடைசிக்காலம் வரை கண்பார்வை தெளிவாக விருந்ததாம்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906௵ ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! இனும்!!
“இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி”
இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)